## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி


01.05.2018 தொழிலாளரான தூய யோசேப்பு - திருப்பலி 02

03.05.2018 தூய அத்தனாசியார் - திருப்பலி 03

03.05.2018 தூய பிலிப்பு, யாக்கோபு திருவிழா - திருப்பலி 04

06.05.2018 பாஸ்கா காலம் 6ஆம் ஞாயிறு - திருப்பலி 06

13.05.2018 தூய மரிய தோமினிக்கா மசரெல்லோ - திருப்பலி 07

13.05.2018 ஆண்டவரின் விண்ணேற்பு பெருவிழா - திருப்பலி 09

14.05.2018 தூய மத்தியாஸ் திருத்தூதர் விழா - திருப்பலி 10

18.05.2018 தூய லெயனார்து முரியால்தோ - திருப்பலி 11

20.05.2018 தூய ஆவியார் பெருவிழா - திருப்பலி 12

26.05.2018 தூய பிலிப்பு நேரி - திருப்பலி 14

27.05.2018 தூய மூவொரு கடவுள் பெருவிழா - திருப்பலி 15

29.05.2018 அருளாளர் ஜோசப் கொவால்ஸ்கி - திருப்பலி 17

31.05.2018 தூய மரியாள் எலிசபெத்தைச் சந்தித்த விழா - திருப்பலி 18


## பகுதி 2: விசுவாசத்தில் வளர...


தூய ஆவியே துணையாளரே 20

மூவொரு இறைவன் - ஒரே கடவுள் 22

தூய மசரெல்லோவின் வாழ்வு - நமக்குத் தரும் பாடங்கள் 24

திருச்சபை செய்திகள் 27

# பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

## 01.05.2018 தொழிலாளரான தூய யோசேப்பு திருப்பலி

**முன்னுரை** திரு. ஜீசஸ் மகுட மன்னன்

புத்தொளி வீசி நித்திரையைக் கலைக்கும் உத்தமர் இயேசுவின் சீடர்களான எம் சகோதர, சகோதரிகளே, நமது தாயாம் திருச்சபை இன்று தொழிலாளர்களின் பாதுகாவலரான தூய யோசேப்பின் விழாவைக் கொண்டாட நம்மை அழைக்கின்றது. உழைப்பின் சிகரமாம் தச்சர் சூசையப்பரின் பக்தி முயற்சி 9ஆம் நூற்றாண்டிலிருந்து மேல்திசை நாடுகளில் பல திருநாள் பட்டியலின்படி கொண்டாடப்பட்டு வருகின்றது. 15ஆம் நூற்றாண்டில் அதிகமாய் வளர்ந்தது. திருத்தந்தை 9ஆம் பத்திநாதர் சூசையப்பரை "திருச்சபையின் பாதுகாவலர்" என டிசம்பர் 8,1870அன்று அறிவித்தார். திருத்தந்தை 13ஆம் சிங்கராயர் 1889ல் சூசையப்பரிடம் செபிக்க அனுமதி வழங்கினார். 12ம் பத்திநாதர் 1955ம் ஆண்டு "தொழிலாளரின் பாதுகாவலர் புனித சூசையப்பர்" என திருப்பலியில் சேர்த்தார். இன்றைய திருத்தந்தை பிரான்சிஸ் மூன்று நற்கருணை மன்றாட்டில் இணைத்தார்.

ஜனவரி மாதம் 16ம் நாள், 2015ஆம் ஆண்டு, பிலிப்பைன்சில் திருத்தந்தை பிரான்சிஸ் உறக்கத்தில் இறை திருவுளம் உணரும் புனித சூசையப்பரின் பக்தி முயற்சியை அறிவித்தார். இந்த பக்தி முயற்சிப்பற்றி நம் திருத்தந்தை பிரான்சிஸ் "என்னுடைய மேசையில் உறங்கும் நிலையில் உள்ள சூசையப்பரின் சுரூபத்தை வைத்திருக்கிறேன். உறங்கும் நிலையிலும் திருச்சபையை அவர் கண்காணிக்கிறார். ஆம், அவரால் அதைச் செய்ய முடியும் என்பது நமக்குத் தெரியும். எப்பொழுதெல்லாம் எனக்குப் பிரச்சனைகள், துன்பங்கள் வருகின்றனவோ, அப்பொழுதெல்லாம் ஒரு சிறிய துண்டு தாளில் அவற்றை எழுதி அவருடைய தலைமாட்டில் வைத்துவிடுவேன். அவரும் அதைக்குறித்து கனவு கண்டு, பிரச்சனைக்குத் தீர்வு கொடுப்பார்" என்கிறார். இவ்வாறு உறங்கும் போதும் உழைத்துக் கொண்டிருக்கிறார்.

நாமும் உறங்கும் நிலையிலுள்ள தூய யோசேப்பின் துணையை நாடினால் நம் பிரச்சனைகளுக்குத் தீர்வும், துன்பங்களிலிருந்து விடுதலையும் கிடைக்கும் என்று உறுதியாக நம்புவோம். தொழிலாளர் களுக்கெல்லாம் ஒரு சிறந்த முன்னோடியாகவும், பாதுகாப்பாளராகவும், பரிந்து பேசுபவராகவும், எல்லாவற்றுக்கும் மேலாக உலக மீட்பர் இயேசுவின் வளர்ப்புத் தந்தையாகவும் கன்னிமரியாவின் கன்னியமிக்க கணவராகவும் ஒரு சாதாரண மனிதனாக, தந்தையாம் கடவுளின் திருவுளத்திற்குக் கீழ்ப்படிந்து, ஒரு நீதிமானாகவும் வாழ்ந்து திருச்சபையின் முழுமுதல் பாதுகாவலரானார். புனித சூசையப்பர் வழியாக அனைத்துத் தொழிலாளர்களையும், சிறப்பாக குடும்பத் தலைவர்களையும் இறைவன் நிறைவாக ஆசீர்வதிக்க வேண்டி இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

## விசுவாசிகளின் மன்றாட்டு

1. நீதியின் அரசே இறைவா, நீதிநெறியோடு, நேர்மையின் இலக்கணமாக வாழ்ந்து காட்டிய தூய சூசையப்பரைப்போல் ஆன்மீகப்பணியாற்றிக் கொண்டிருக்கும் தலைமை ஆயர் திருத்தந்தை பிரான்சிஸ் ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவறத்தார், வேதியர்கள் பொது நிலையினர் அனைவரும் தங்களின் அழைத்தலின் மேன்மையை உணர்ந்தவர்களாக வாழ வேண்டுமென்று, தூய யோசேப்பு வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

2. வழிநடத்தும் தெய்வமே எம் இறைவா, தியாகத்தின் செம்மலாகிய தூய சூசையப்பரின் பரிந்துரையால் உலகத்தலைவர்கள், இனம், மத வேறுபாட்டால் மக்களை பிளவுப்படுத்தாமல், மனிதநேயம், மனித மாண்பு, மனித உரிமை, சமத்துவம், சகோதரத்துவம் கொண்டு மக்களை வழிநடத்திச் செல்வதற்கான வரமருள வேண்டுமென்று தூய யோசேப்பு வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

3. உயிர்ப்பின் நாயகனே எம் இறைவா, நல்ல குடும்பத் தலைவராகத் திகழ்ந்த தூய சூசையப்பரின் பரிந்துரை வழியாக இன்றைய இக்கட்டான சூழ்நிலையில், குடும்பங்களிலுள்ள பிளவுகள், மனவருத்தங்கள், பிரிவினைகள் நீங்கி, அன்பு, பாசம், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை ஆகியவைகளைக் கொண்டு தூய வாழ்க்கை வாழ வரமருள தூய யோசேப்பு வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

4. ஆறுதலளிக்கும் ஆண்டவரே, தூய யோசேப்பின் பரிந்துரை வழியாக, பணியாளர்களுக்கு பணி செய்கின்ற இடங்களில் பாதுகாப்பும், வேலை இல்லாதவர்களுக்கு தகுந்த வேலை வாய்ப்பும், வேலைக்கேற்ற ஊதியமும், வேலை செய்ய உடல் வலிமையும் தந்து காத்தருள வேண்டுமென்று தூய யோசேப்பு வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

## 02.05.2018 தூய அத்தனாசியார் திருப்பலி

**முன்னுரை**

திருமதி. ராணிசம்பந்தன்

இறையேசுவில் பிரியமான இறைமக்களே, இன்று நாம் தூய அத்தனாசியஸ் என்னும் மிக சிறப்பு வாய்ந்த புனிதரை நினைவு கூறுகிறோம். கி.பி. 297ல் எகிப்தின் அலெக்சாண்டிரியாவில் பிறந்தார். இவரது பெற்றோர் இவரைச் சிறந்த கல்வியாளராக உருவாக்க எண்ணி, மேற்படிப்புகள் படிக்க வைத்தனர். ஆனால் இவரோ துறவறத்தை மேற்கொண்டார். மறைவல்லுநராகவும், இறையியலில் மிகச்சிறந்தவராகவும் திகழ்ந்ததால் இவரை அலெக்சாண்டிரியாவின் ஆயர், புனித அலெக்சாண்டர் தன் உதவியாளராக நியமித்தார். அவரின் மறைவுக்குப்பின் புனித அத்தனாசியுசே அலெக்சாண்டிரியாவின் ஆயரானார். தனது 46ஆண்டு ஆயர் பதவியின்போது, ஆரியுஸ் என்ற குருவின் ஆரிய பதித கொள்கையான கடவுள் இயேசு கிறிஸ்துவை ஒரு

சிறந்த படைப்பாக உருவாக்கினார் என்பதை எதிர்த்து, "ஒரே கடவுள் மூன்று கடவுளாக இருக்கிறார் என்ற உண்மையை" மனஉறுதியுடன் நிலைப்படுத்தினார். இதனால் 4 பேரரசர்கள் இவரை பலமுறை நாடுகடத்தி பல துன்பங்களை அடையச் செய்தனர்.

இவர் சேவைபுரிந்த காலத்தில் புனித அந்தோணியாரின் பல அற்புதங்களைக் கண்டு அனுபவித்தார். இவர் புனித அந்தோணியாரின் வாழ்க்கை வரலாற்றை இலத்தீன் மொழியில் எழுதினார். தன்னுடைய 46 ஆண்டு சேவையில் 17ஆண்டுகள் நாடுகடத்தப்பட்டவர். திருஅவையில் மிக முக்கிய புனிதராகக் கருதப்பட்டவர். இவரது புனிதத்தைக் கண்டு ஆலயங்களின் தந்தை என்றும் பண்பாட்டின் தந்தை என்றும் அழைக்கப்பட்டவர். இவரது மரணவேளையில் பல குருக்களும், ஆயரும் புடைசூழ்ந்து செபிக்க இறைவனடி சேர்ந்தார். புனிதத்தில் வாழ்ந்த இவரது மனஉறுதியை மனதில் இருத்தி நாமும் இவரைப்போலவே இறைவனின் மேல் மனஉறுதியைப் பெற இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல இறைவா, திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியினர், பொதுநிலையினர் ஆகிய அனைவரும் கத்தோலிக்க பாரம்பரிய கருத்துகளையும் கொள்கைகளையும் பிற சபைகளுக்கு விட்டுத் தராமல் இயேசுகிறிஸ்துவின் மதிப்பீடுகளுக்கேற்ப வாழ வேண்டிய அருளைத் தருமாறு உம்மை மன்றாடுகிறோம்.
2. பாதுகாப்பின் இறைவா, இயற்கையின் சீற்றத்தால் அதிகரித்துக் கொண்டிருக்கும் வெப்ப சக்தியின் தாக்கத்தைத் தனித்து அதனால் வரக்கூடிய பலநோய்களையும், துன்பங்களையும் தாங்கக்கூடிய உடல்வலிமையையும், வெப்பச் சக்தியைக் குறைக்க நல்ல மழையையும் தரவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. மனஉறுதியின் வடிவமே இறைவா, உம்மைப்போன்று துன்பங்களைக் கண்டு துவளாமல், பதித கொள்கையை எதிர்த்து பலமுறை நாடுகடத்தப்பட்ட போதும் மனந்தளராமல் ஒரு சிறந்த மறைவல்லுநராக வாழ்ந்த புனித அத்தனாசியஸ் போன்று கிறிஸ்தவ நம்பிக்கையில் மனஉறுதியுடன் வாழ எமக்கு வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 03.05.2018 தூய பிலிப்பு, யாக்கோபு திருவிழா திருப்பலி

**முன்னுரை**

திருமதி. ராணிவில்சன்

புனித பிலிப்பு, யாக்கோபு இவர்களின் விழா வாழ்த்துக்களும் வணக்கங்களும். இவர்கள் இருவரின் சான்று வாழ்வும், உயர்ந்த பண்புகளும் இறைவனையும் வாழ்வின் மதிப்பீடுகளையும் உலகம் முழுவதும் பறைச்சாற்றப்படுகின்றன. திருத்தூதர் பிலிப்பு கலிலேயாவிலுள்ள, பெத்சாயிதாவில் பிறந்தவர். இறை அழைத்தலுக்கு உடனே செவிமடுத்தவர். ஆகவே உடனே தனது நண்பர் நத்தானியேலிடம் தெரிவித்து திறந்த உள்ளத்தோடு ஐயமின்றி "வந்து

பாரும்" என அழைக்கின்றார். மேலும் கிரேக்கர் எருசலேம் வந்து பிலிப்புவிடம் "ஐயா, இறை இயேசுவைக் காண விரும்புகிறோம்" எனக் கூறியபோது பிலிப்பு செயல்பட்ட விதம் அவரை உயர்த்திப் பிடிக்கிறது. தூய ஆவியானரின் வருகைக்குப்பின் ஆசியா சென்று மறைப்பரப்புப் பணியில் ஈடுபட்டு பிரிஞ்சியாவில், இயராப்போலிசு என்ற நகரில் சிலுவைச் சாவை ஏற்றார் என வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

திருத்தூதர் யாக்கோபு யூதா ததேயுவின் சகோதரர். ஆண்டவர் இயேசுவின் உறவினர். அல்பேயுவின் மகனான இவர் பக்தியில் சிறந்து விளங்கியவர். எருசலேம் நகரின் முதல் ஆயர் (திப. 21:18) யூத மரபுகளைக் காத்து எருசலேம் ஆலயத்தின் திருப்பணிகளைத் திறம்பட நடத்தியவர். ஏரோது, அக்ரிபா இழைத்த கொடுமைகளைப் பொறுமையோடு தாங்கியவர். மனந்திரும்புதலுக்குப் பிறகு புனித பவுலின் போதனைகளை மக்கள் சந்தேகித்தபோது பவுலைப்பற்றி அறிவிக்க இவரை இருகரம் விரித்து வரவேற்றவர். கடவுளிடம் திரும்பும் இவர்களுக்கும் பிற இனத்தாருக்கும் தொல்லைக் கொடுக்கக்கூடாது எனக் கூறியவர் (திப.1 5:20).

இவர் எழுதிய திருமுகத்தை திருத்தந்தை 23ம் அருளப்பர் தமது தியானக் குறிப்பேட்டில் குறிப்பிட்டுள்ளார் (23.11.1948) இத்திருமுகம் துறவிகளுக்கும், திருப்பணி புரிவோருக்கும், பொதுநிலையினருக்கும் மாபெரும் செல்வமும் விலைமதிப்பற்ற தங்கச் சுரங்கமும் ஆகும். கி.பி. 62ல் புனித யாக்கோபு கல்லால் எறியப்பட்டு கொலைச் செய்யப்பட்டார் என வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். இந்த இரு புனிதர்களைப்போல இறைவனின் அழைத்தலுக்குச் செவிமடுத்து, நாம் இறைப்பணியைத் திறம்படச் செயல்படுத்த வேண்டுமென்று இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## விசுவாசிகளின் மன்றாட்டு

1. தாயும் தந்தையுமான இறைவா, எங்கள் திருஅவையின் திருப்பணியாளர்கள் அனைவரும் தூய ஆவியின் வல்லமையைப் பெற்று திருத்தூதர்கள் பிலிப்பு, யாக்கோபு போலச் செயல்பட்டு, இறைமக்கள் அனைவரையும் நல்ல கிறிஸ்த வாழ்வுக்கு அழைத்துச் செல்லும் வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
2. இரக்கமே உருவான இறைவா, எங்கள் நாட்டையாளும் தலைவர்களுக்காக மன்றாடுகிறோம். திருத்தூதர்களான பிலிப்பு, யாக்கோபுவின் செபத்தால் எம் தலைவர்கள் மக்களின் முன்னேற்றமே தங்களின் குறிக்கோள் என்று கொண்டு தாராள உள்ளத்தோடு பணிபுரியும், உள்ளம் பெற்றிட வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
3. வழிநடத்தும் இறைவா, திருத்தூதர்கள் பிலிப்பு, யாக்கோபு போல இறைச்சித்தத்திற்கு அடிபணிந்து, கையளித்து நம்பிக்கையோடு அனைத்து கிறிஸ்தவர்களும் வாழ வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

## 06.05.2018 பாஸ்கா காலம் 6ஆம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை**

திருமதி. பத்மாவதி

I. தி.ப. 10: 25-26,34-35,44-48 II. 1யோவா. 4: 7-10 யோவான் 15: 9-17

இறையேசுவில் அன்புள்ள இறைமக்களே, இன்றைய வாசகங்கள் அன்பை மையமாகக் கொண்டு நமது அன்பு, இறைவனின் அன்பு என்று மிகவும் அழகாக விளக்கிக் கூறுகிறது. முதல் வாசகத்தில் பேதுரு வழியாக கொர்னேலேயு வீட்டில் தூய ஆவியானவர் அங்கிருந்த அனைவர்மீதும் ஆவியைப் பொழிந்தார். இறைவன் ஆள்பார்த்து செயல்படுவதில்லை என்பதையும், இரண்டாம் வாசகத்தில் யோவான் வழியாக நாம் ஒருவரை ஒருவர் அன்பு செலுத்துவது கடவுளிமிருந்து வந்த கொடை என்று கூறுகிறார். மேலும் இன்றைய நற்செய்தி வாசகங்கள், நமக்கு கூறுவது கடவுளின் விலை மதிப்பற்ற அன்பைப்பற்றி ஆழமும் அகலமும், நிபந்தனையும், எல்லையில்லா அன்பு என்று கூறப்படுகிறது. நம்மை நிறை குறைகளோடு ஏற்றுக்கொள்ளும். நமக்காக தம்மையே தியாகம் செய்த அன்புதான் இயேசுவின் அன்பு. நம் இயேசு கூறுகிறார், "உங்களை நான் நண்பர்கள் என்றேன், ஏனெனில் என் தந்தையிடமிருந்து நான் கேட்டவை அனைத்தையும் உங்களுக்கு அறிவித்தேன்" "நீங்கள் என்னைத் தேர்ந்துக் கொள்ளவில்லை. நான்தான் உங்களைத் தேர்ந்துக்கொண்டேன்" என்கிறார் இயேசு.

இன்றைய சமுதாயச் சூழலில் நாம் குடும்பத்தில் நல்ல தலைவராக, சமுதாயத்தில் நல்ல வழிகாட்டியாக, தடுமாறுகிறவனுக்கு புதிய பாதையாக, வாழ்வை இழந்தவர்களுக்கு வாழ்வாக, இருட்டில் நிலைத் தடுமாறும் மனிதருக்கு ஒளியாக, நாம் திகழ வேண்டும். இயேசு கூறியதுபோல் "நீங்கள் கனிதரவும், நீங்கள் தரும்கனி, நிலைத்திருக்கவும் உங்களை ஏற்படுத்தினேன்" என்பதிற்கிணங்க இயேசுவின் அன்பு வழியில் செயல்பட நம் வானகத் தந்தையை நோக்கி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

### விசுவாசிகளின் மன்றாட்டு

1. விண்ணகத் தந்தையே இறைவா, உம்மால் திருப்பொழிவு செய்யப்பட்ட திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், அருட்பணியாளர்கள் அனைவரையும் உமது அன்புப் பாதையில் நடத்திச் செல்லவும் திருச்சபை மென்மேலும் சிறப்படையவும் அருள்புரியும்படி உம்மை மன்றாடுகிறோம்.
2. நீதியின் தந்தையே இறைவா, எம் நாட்டையாளும் தலைவர்கள், பதவி மோகத்தையும், பணம்சேர்க்கும் எண்ணங்களையும் விட்டுவிட்டு, மக்களின் நலனில் அக்கறைக்கொண்டு அறநெறியில் நடந்து நீதியையும் அமைதியையும் வளமான வாழ்வையும் மக்களுக்கு அளித்து, ஆட்சிபுரியும் நல்ல மனத்திடத்தை அருளும்படி உம்மை மன்றாடுகிறோம்.

3. ஒளிமயமான இறைவா, பலவித எதிர்ப்பார்ப்புகளோடும், ஏக்கங்களோடும், துன்ப துயரங்களோடும் வந்திருக்கும் எங்கள்மேல் உமது கருணைக்கண்களைத் திருப்பியருள வேண்டுமென்றும், நாங்கள் ஒருவரையொருவர் நிறைந்த உள்ளத்தோடு ஏற்று, அன்புச்செய்து வாழ வரமருளவும் உம்மை மன்றாடுகிறோம்.

4. அன்பின் ஊற்றே எம் இறைவா, நீர் கொண்டுள்ள பற்றற்ற அன்பினால் எம் இளையோரை ஆசீர்வதியும். அவர்கள் தங்களை அன்பு செய்யவும், பெற்றோர், உற்றார், உறவினர், நண்பர்களிடையே அன்புறவோடு வாழ, வளர, எதிர்காலத்தில் தங்களின் பிள்ளைகளை நிறை அன்போடு பராமரித்து வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 13.05.2018 தூய மரிய தோமினிக்கா மசரெல்லோ திருப்பலி

**முன்னுரை** திரு. ஜான் அலெக்ஸ்

இறை இயேசுவில் அன்புக்குரியவர்களே, இன்று நாம் புனித மரிய தோமினிக்கா மசரெல்லோ அவர்களின் திருவிழாவை நினைவு கூறும் இந்நேரத்தில் அவரது வாழ்க்கையை நான்கு பகுதிகளாகப் பிரித்து அறிய முற்பட்டால் அதில் அவர் பிறப்பிலிருந்து முதல் 13ஆண்டுகள் தன் பெற்றோருடனும், எஞ்சிய ஆண்டுகளைத் தன் ஆன்ம இயக்குநர் தந்தை தோமினிக்கோ பெஸ்டாரினோ அவர்களுடனும் இணைந்து இறை நம்பிக்கையில் முதிர்ச்சி பெற பயணித்ததை பார்க்க முடிகிறது. இரண்டாவது கட்டமாக அடுத்த 10 ஆண்டுகளில் கடுமையாக உடல்நலக் குறைவுகளைச் சந்தித்தார். எனினும் நற்கருணை அருட்சாதனம் பெற்று அது முதல் பங்குதளத்தில் நற்பணிகளில் பங்குகொண்டார். கற்பு என்னும் புண்ணியத்தைக் கடைப்பிடித்து, தன்னையே முழுமையாக இறைவனுக்கு அர்ப்பணிக்க முடிவெடுத்தார். அமல அன்னை சகோதரிகள் என்ற அமைப்பில் இணைந்து இறை மற்றும் பிறரன்பு பணியாற்றினார்.

மூன்றாவது பகுதியில் 12 ஆண்டுகளில் இறைவனது திட்டத்திற்கு ஏற்ப தன்னைத் தயார்ப் படுத்திக்கொண்டார். தொன் போஸ்கோவின் சலேசிய சபைப் பற்றி அறிந்துகொண்டார். சலேசிய சபையினர் ஆண்களுக்கான இளையோர் பணி செய்வதுபோல இளம் பெண்களுக்கும் ஒரு தனி சபை உருவாக்கிட தொன்போஸ்கோ முயற்சி மேற்கொண்டிருப்பதைக் கண்டு மகிழ்ந்தார். தனது அழைப்பை உணர்ந்தவராக தொன் போஸ்கோவின் கோரிக்கையை ஏற்று அவர் ஏற்படுத்திய சகாய அன்னையின் புதல்வியர் சபையின் துணை நிறுவனரானார். ஆதரவற்ற அனாதை இளம் சிறுமிகள் மற்றும் இளம் பெண்களைப் பராமரித்தல், கற்பித்தல், மீட்பின் பாதையிலும் தனிமனித

ஆளுமை வளர்ச்சியிலும் வழிநடத்தல் ஆகியவற்றைத் தம் பணியின் இலக்காகக் கொண்டு தொன் போஸ்கோவின் வழிகாட்டுதலில் சிறப்பாகச் செயல்பட்டார்.

தனது வாழ்நாளின் இறுதி பகுதியாக 9 ஆண்டுகள் தனது சலேசிய சகோதரிகளின் ஆன்மீக உருவாக்கங்களில் தன்னுடைய தாயன்பைச் சேர்த்து வளர்த்தெடுத்தார். புதிய இல்லங்கள், பல நாடுகளில் சென்று மறைப்பணியாற்றுதல் என சபையை விரிவுபடுத்தினார். மே 14 1881ல் மறைந்தார், அவரது விழா மே 13ல் திருஅவை கொண்டாடுகிறது. இவரது வாழ்வு ஒரு மாபெரும் நற்செய்தி என்பதை யாரும் மறுக்க முடியாது. இன்றைய நற்செய்தியில் இயேசு நம் நம்பிக்கை வாழ்வை எண்ணிப்பார்க்க அழைக்கிறார். தன்னுடைய சீடர்களை நற்செய்தியைப் பறைச்சாற்றுவதற்காக அனுப்புகிறார். புனித மரிய மசரெல்லோவைப் போன்று நாமும் நம்பிக்கையில் வேறூன்றி நமது நம்பிக்கை வாழ்வை வளர்த்துக் கொள்ள தொடர்ந்து இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. தூய்மையின் திருஉருவே இயேசுவே, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகளுக்காக மன்றாடுகிறோம். உள்ளமும் செயலும் நன்மையைக் கனியாக ஈந்தால்தான் மனிதம் முழுமையாக மலர்கிறது என்பதை அவர்களின் வாழ்வின்மூலம் நாங்கள் அறிந்து தூய வாழ்வு வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. "நீங்கள் சென்று எல்லா மக்களினத்தாரையும் என் சீடராக்குங்கள். இதோ உலகம் முடிவுவரை எந்நாளும் நான் உங்களோடு இருக்கிறேன்" என்று கூறிய இறைவா, நாங்கள் உம் பணி செய்வதில் ஏற்படும் துன்ப துயரங்களின் நடுவில் உம் உடனிருப்பை உணர்ந்திட அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. அனைத்தையும் இறைத்திட்டமென ஏற்று பிறருக்காகவே நற்செய்தி வாழ்வு வாழ்ந்த புனித மரிய மசரெல்லோ, ஏழை மக்கள் வாழ்வு பெறவும், நோயாளிகள் சுகம் பெறவும் தொடர்ந்து பணியாற்றியதைப் போல எமது வாழ்விலும் நாங்கள் சந்திக்கும் எளிய மக்களுக்கு இயன்ற உதவிகளை நிறைவாய்ச் செய்யும் மனத்தைத் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. இறைவா அமைதி தேடி ஏங்குகின்ற மக்களின் வாழ்வில் இன்று கோலோச்சுகின்ற அடிமைத்தனங்கள் மறைந்து சமத்துவமும், அன்பும், சுதந்திர அனுபவமும் விளங்கிட அதற்காக நாங்கள் உழைக்கும் அருளைத்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

## 13.05.2018 ஆண்டவரின் விண்ணேற்பு பெருவிழா திருப்பலி

**முன்னுரை** திருமதி. டிலைலா சேவியர்

I. தி.ப. 1: 1-11 II.எபே. 4:1-13 மாற்கு 16:15-20

இறையேசுவில் பிரியமானவர்களே, இன்று நமது தாய்த் திருச்சபையானது ஆண்டவரின் விண்ணேற்பு பெருவிழாவைக் கொண்டாடுகிறது. மனித மீட்புக்காக மனிதனைப் பாவத்திலிருந்து மீட்க மனுவுருவெடுத்த இறைவன், மனிதரின் பாவங்களைப் போக்க சிலுவைப் பாரத்தை ஏற்று சிலுவையில் மரித்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். உயிர்த்தவர் 40 நாட்கள் இவ்வுலகில் மனிதரிடையே தம் சீடர்களுக்குக் காட்சியளித்து, பல்வேறு அருஞ்செயல்களால் தன்னை அவர்களுக்கு வெளிபடுத்தினார்.

இன்றைய முதல் வாசகம் நம் ஆண்டவர் விண்ணேற்றம் அடைந்ததைக் குறித்தும், தூய ஆவியைப் பற்றி வாக்குறுதியைக் குறித்தும் நமக்குத் தெரிவிக்கிறது. தூய ஆவியானவர் சீடர்களின்மீது இறங்கும்போது அவர்கள் கடவுளின் வல்லமையைப் பற்றி உலகின் கடை எல்லைவரை அறிவிக்கும் வல்லமையைப் பெறுவார்கள் என இயேசு கூறுகிறார். இரண்டாம் வாசகத்தின் வழியாக கடவுளின் வல்லமையால் ஆகாதது ஒன்றுமில்லை என்ற எண்ணத்தை நமது உள்ளத்தில் ஊன்றி நாம் அனைவரும் மீட்படைவோம் என்று அறிவுறுத்தப்படுகிறோம்.

தூய ஆவியாரின் துணையால் இவ்வாசகத்தை மனதில் நிலைநிறுத்தி தங்களுக்கு ஏற்பட்ட துன்பங்கள், எதிர்ப்புகள், அவமானங்கள், கொடுமைகள் அனைத்தையும் தாங்கி நற்செய்தியைத் தங்களுடைய வாழ்க்கையில் வாழ்ந்து காட்டினர். கிறிஸ்துவின் விண்ணேற்பில் பங்குப்பெற போகிறோம். தன்னைப் பல்வேறு நிபந்தனைகளுக்கும் அவமானங்களுக்கும் உட்படுத்திய மக்களை இயேசு மன்னித்து, கடவுளின் திட்டத்தை நிறைவேற்ற தான் வாழ்ந்து காட்டிய வாழ்வை வாழ நம்மையும் அழைக்கிறார். இயேசுவின் விண்ணேற்பு நாளான இன்று நற்செய்தியின் மதிப்பீடுகளையும் மனித மதிப்பீடுகளையும் பின்பற்றி ஒரு முழுமையான கிறிஸ்துவனாக வாழவும் வரம் வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, திருத்தூதர்களுக்கு தூய ஆவியை வழங்கி எப்போதும் உங்களுடனே இருக்கிறேன் என்று வாக்களித்த இயேசுவே, இன்று திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் உமது தூய ஆவியானவரின் துணையும், திடனும் பெற்று நீர் விட்டுச்சென்ற நற்செய்திப் பணியைத் தொடர்ந்து திறம்பட நடத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. நம்பிக்கையின் ஊற்றே எம் இறைவா, ஆண்டவரின் விண்ணேற்பு விழாவினைச் சிறப்பிக்கும் நாங்கள் அனைவரும் நற்செய்தி அறிவிக்கும் தூதுவர்களாக வாழ வேண்டுமென்றும், அதற்குத் தேவையான ஆற்றலும், நம்பிக்கையும் பெறவேண்டுமென்றும் உம்மை மன்றாடுகிறோம்.
3. அன்பே உருவான இறைவா, இன்றைய காலகட்டத்தில் நற்செய்தியை அறிவிப்பவர்களுக்குஏற்படும்இன்னல்கள்,துன்பங்கள்,அவமானங்கள் இவைகளினால் தங்களுடைய நற்செய்திப் பணியிலிருந்து விலகிவிடாமல் இவர்களுக்குத் தேவையான மனஉறுதியையும், நல்ல உடல் சுகத்தையும் தந்தருள உம்மை மன்றாடுகிறோம்.
4. ஞானத்தின் ஊற்றே இறைவா, அரசாங்கத் தேர்வினை எழுதும் அனைத்து மாணவ மாணவிகளை உமது ஞானத்தினால் நிரப்பியருளும். இவர்களுக்கு வேண்டிய ஞானத்தையும் நல்லவிதமான மதிப்பெண்களையும் கொடுத்து வாழ்வில் வெற்றிப்பெறவும், அதனால் இவர்களுக்கு நல்ல வளமான எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுக்குமாறு உம்மை மன்றாடுகிறோம்.

## 14.05.2018 தூய மத்தியாஸ் திருத்தூதர் விழா திருப்பலி

**முன்னுரை**

திருமதி. ராணி வில்சன்

எத்தியோப்பியா பகுதிகளில் இறை இயேசுவைப்பற்றி அறிவித்தவர். "ஆண்டவர் இயேசுவிடம் உயிர்த்தெழுதலுக்கு சாட்சியாய் விளங்க, அவர் உயிரோடு செயல்பட்ட காலத்தில் இருந்த ஒருவரைச் சேர்த்துக்கொள்ள வரவேண்டியது தேவையாயிற்று. இறை இயேசுவோடு வாழ்ந்தவராகவும், உயிர்ப்புக்குச் சான்று பகர்பவராகவும் இருத்தல் வேண்டும். ஒருதலைபட்டசமாக அன்று, இறைத் திருவுளம் அறிந்து தேர்ந்தெடுப்பதற்காக திருவுளச்சீட்டுப் போட்டு தேர்ந்துக்கொள்கின்றனர். யூதாசுக்குப்பதிலாகதேர்ந்தெடுக்கப்பட்டவர்இவர்.இவரதுஇறைப்பணியில் இறைஇயேசுவைப்போல் "தம்நண்பர்களுக்காகஉயிரைக்கொடுப்பதைவிட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை" என்பதற்கேற்ப தம் வாழ்வை அமைத்துக் கொண்டவர். இறை இயேசுவுக்காக எத்தியோப்பியாவில் சிலுவையில் அறையுண்டு இறந்ததாகவும் எருசலேமிலும் தலை வெட்டப்பட்டு உயிரைத் தியாகம் செய்ததாகவும் சிலர் கூறுவர். இவர் தையல் தைப்பவர், தச்சர் மற்றும் குடிபோதையிலிருந்து மீண்டவர்களுக்கும் பாதுகாவலர். நமது இறைப்பணி எதை நோக்கியதாக உள்ளது என்ற சிந்தனையோடு இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, புனித மத்தியாசுப்போல இறைப் பணிக்காகத் தேர்ந்தெடுத்த எம் திருஅவையின் திருத்தந்தை மற்றும்

அனைத்துப் பணியாளர்களையும் நீர் ஆசீர்வதித்து வழிநடத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பு இறைவா, திருஅவையில் திருமுழுக்குப் பெற்ற அனைவரும், இன்றைய விழா நாயகன் புனித மத்தியாசுவைப்போல இன்னல்கள், இடையூறுகள் மத்தியிலும், நற்செய்தி அறிவித்து புனிதத்தை நோக்கிய பயணத்தில் வெற்றபெற உம்மை மன்றாடுகிறோம்.

3. எம் இறைவா, நற்செய்திக்காக, உம்மைப் பற்றியும் உமது செயல்கள் பற்றியும் திருத்தந்தையரின் மடல்கள், பல எழுத்தாளர்கள் எழுதின புத்தகங்கள், அவற்றின் வழியாக வெளிப்படுகின்ற இறை வார்த்தைகள் அனைத்தும் மக்களைச் சென்றடையவும் இறையழைத்தல் பெருகவும் உம்மை மன்றாடுகிறோம்.

4. அருளின் ஊற்றே உம் இறைவா, இன்றைய உலகில் நிலவும், கொலை, பாலியல் பலாத்காரம், வன்முறை போன்றவைகளை தகர்த்து உலகில் அமைதியும், ஒற்றுமையும், சாமாதனமும் நிலவவும், ஒருவரையொருவர் சகோதரத்துவத்தோடு அன்பு செலுத்தவும் வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 18.05.2018 தூய லெயனார்து முரியால்தோ திருப்பலி

**முன்னுரை** சலேசிய புனிதர்களின் திருப்பலி புத்தகம்

தூய லெயனார்து முரியால்தோ 1828ம் ஆண்டு தூரின் நகரில் பிறந்தார். இவர் தனது குடும்பத்திலும், சவோனாவைச் சேர்ந்த ஸ்கொலாப்பியரிடமும் மிகச் சிறந்த கல்வியைப் பெற்றார். இறைவார்த்தை மற்றும் இறையியலின் நெறிமுறைகளை விடாமுயற்சியுடன் படித்து முடித்தப்பின் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். இளங்குருவாக இருந்தபோது மேய்ப்புப்பணி செய்யவும், சிறைப்பட்டிருக்கும் இளையோர் மறைக்கல்வியின் வழியாக நல்வாழ்வு பெறவும், மக்களுக்கு இறைவார்த்தையை எடுத்துரைக்கவும், அச்சுப்பணி மூலம் விசுவாசத்தைப் பரப்பவும் தன்னையே முழுமையாக அர்ப்பணித்தார். இவ்வாறு இவர் தனது ஆன்மீக வாழ்வைச் செபத்தாலும், பணி வாழ்வை எண்ணற்ற மேம்பாட்டுத் திட்டங்களாலும் கழித்தார். தந்தை க.்.பாசோ மற்றும் தொன் போஸ்கோவுடன் இணைந்து இவர் உழைத்ததால் தூரினிலுள்ள புனித அலோசியஸ் ஆரட்டரிக்கு இயக்குநராக அமர்த்தப்பட்டார்.

1873ம் ஆண்டு தூரின் நகரத்து சமயப் பணியார்வமுடைய புனித யோசேப்பின் சபையை (Pious Turin Society of Saint Joseph) நிறுவினார். சிறிது காலத்திற்குப் பின் தொழிற்சாலைகளில் பணிபுரியும் இளைஞர்களுக்குச் சிறந்ததொரு கல்விப் பணியையும், மேம்படுத்தும் பணியையும் செய்தார். லெயனார்து, இளைஞர்களின்மீது கொண்ட அன்பினால் அவர்களுக்காகத் தன்னையே அர்ப்பணித்தார். பல்வேறு இன்னல்களுக்கிடையில் ஆர்த்தியியனெல்லி என்ற கல்லூரியின் இயக்குநராய் முப்பத்தி நான்கு ஆண்டுகள் பொறுப்பேற்று கிறிஸ்துவக் கோட்பாடுகளிலும் தொழிற்

சட்டத்துறையிலும் இளைஞர்களைப் பயிற்றுவித்து, உருவாக்கினார். ஏழை, அனாதை இளைஞர்களுக்குப் பொருத்தமான பாதுகாப்பாளர்களைச் சட்டப்படி பெற்றுத்தந்தார். மேலும் கத்தோலிக்கப் பணியாளர்களுக்குச் செயல் திட்டங்களையும், அமைப்புகளையும் உருவாக்கித் தந்தார். இவர் "அமைதியில் செயல்படு" (Silent Action) என்ற விருதுவாக்கை ஏற்றவராய் அனைவரோடும் இனிமையாகப் பழகி உதவியும் செய்தார்.

1887ம் ஆண்டு கொடிய நோயால் தாக்கப்பட்டு இறக்கும் தருவாயில் இருந்த இவர், தொன்போஸ்கோவின் இறையாசீரால் முழு குணம் பெற்று பல்வேறு இன்னல்களுக்கிடையிலும் பின்விளைவுகளுக்கிடையிலும் அயராது உழைத்தார். இவர் 1900ம் ஆண்டு மார்ச் 30ம் நாள் விண்ணக வாழ்வை அடைந்தார். திருத்தந்தை ஆறாம் சின்னப்பர் இவரை 1963ம் ஆண்டு அருளாளர் நிலைக்கும், 1970ம் ஆண்டு மே 3ம் நாள் புனிதர் நிலைக்கும் உயர்த்தினார். இவரின் அமைதியான பணியார்வத்தையும் இறைப்பணி புரிவதில் இவருக்கிருந்த உறுதியையும் நாம் பெற்று வாழ இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

**பதில்:** ஆண்டவரே, உமது அன்பினால் எங்களுக்குச் செவிசாய்த்தருளும்

1. திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் அனைவரும் தங்களது திருத்தூதுப் பணியில் உண்மையுள்ளவர்களாக விளங்கவும் இறைமக்களை நிறையன்பில் வழிநடத்துவதில் சிறந்து விளங்கவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. கிறிஸ்துவின் அழைப்பிற்கேற்ப அநேக இளையோர் பிறரின் நல்வாழ்விற்காக தங்களையே அர்ப்பணிக்க வேண்டுமென்றும், இறைவனின் அன்பினால் உறுதிப்படுத்தப்பட்டு இறைமக்கள் தங்களது வாழ்க்கையில் அனுபவிக்கும் துன்பங்களையும், சோதனைகளையும் இறைத்தந்தையின் சித்தத்திற்கு முழுமையாகக் கையளிக்க வேண்டுமென்றும் இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. அரசியல் தலைவர்கள், சமூக, பொருளாதார செயல்பாடுகளில் ஈடுபட்டுள்ளோர் அனைவரும் சமத்துவமும், சகோதரத்துவமும், நீதியுமுமான சிறந்த உலகினைக் கட்டியெழுப்ப வேண்டிய தாராள உள்ளத்தைப் பெற வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 20.05.2018 தூய ஆவியார் பெருவிழா திருப்பலி

**முன்னுரை** திரு. விக்டர்

I. தி.ப. 2:1-11 II. கலா. 5: 16-25 யோவா. 15: 26-27, 16:12-15

இயேசு மரித்து உயிர்த்தபின் வருகிற ஐம்பதாவது நாளை "பரிசுத்த ஆவியின் விழா" என்று கொண்டாடி மகிழ்கின்றோம். இந்த விழாவை "பெந்தகோஸ்து விழா" என்றும் சொல்லிக் கொண்டாடுவது உண்டு. பெந்தகோஸ்து என்றால் 50வது நாள் என்பது பொருள். பழைய ஏற்பாட்டுக்

காலத்தில் ஆண்டவராகிய கடவுள் மோசே மூலமாக இஸ்ரயேல் மக்கள் கொண்டாடும்படி ஏற்படுத்தப்பட்ட விழாதான் இந்த பெந்தகோஸ்தே விழா.

இஸ்ரயேல் மக்கள் தங்கள் வயல்களில் கோதுமையை அறுத்து முடித்தபிறகு ஏழுவாரங்களைக் கணக்கிட வேண்டும். ஏழாம் வார ஓய்வு நாளுக்கு மறுநாளான ஐம்பதாவது நாளில் ஆண்டவருக்குப் புதுப்படையலைச் செலுத்துங்கள். அந்நாளைத் திருப்பேரவை நாளாக அறிவியுங்கள் (லேவி. 23:15-22). அறுவடையின் திருவிழாவாகக் கொண்டாடப்பட்டு வந்த இந்த விழாவானது பழைய ஏற்பாட்டின் பாஸ்கா விழாவிற்குப் பிறகு வருகிற 50வது நாளில் கொண்டாடப்பட்டு வந்து, புதிய ஏற்பாட்டில் ஆண்டவராகிய இயேசு பாஸ்கா விழாவன்றுதான் சிலுவையில் மரித்தார். அவர் மரித்த 50வது நாளில் பெந்தகோஸ்தே விழா வழக்கம்போலவே யூதர்களால் கொண்டாடப்பட்டது. ஆனால் அன்றுதான் பரிசுத்த ஆவியார் அப்போஸ்தலர் மேலும் சீடர்கள்மேலும் பொழியப்பட்டார்.

எனவே இந்த பரிசுத்த ஆவியின் விழாவை "பெந்தகோஸ்தே" விழா என்று சொல்லி நாம் இன்று கொண்டாடி வருகின்றோம். பழைய ஏற்பாட்டில் ஆண்டவர் இஸ்ரயேல் மக்களுக்கு மோசே மூலமாக பத்துக் கட்டளைகள் கொடுத்தார். அன்று அதை ஏற்காத 3000பேர் ஒரே நாளில் மடிந்துபோயினர் (விப.32:26). புதிய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியின் வருகை மூலமாக திருச்சபைக்கு புது வாழ்வு வழங்கப்பட்டது. இதை ஏற்றுக்கொண்ட 3000பேர் ஒரே நாளில் புதுவாழ்வு பெற்றனர் (இச.2:41). உலகின் இறுதிவரை நம்மோடு தங்கியிருக்கவும், நம்மை வழிநடத்தவும், வழங்கப்பட்டவர்தான் இந்த பரிசுத்த ஆவியானவர். அவரது வழிகாட்டுதலில் நடக்கும்போது வாழ்வு பெறுகிறோம், புத்துணர்வு அடைகிறோம், விவிலிய விளக்கங்களைப் பெறுகிறோம், இயேசுவின் சாட்சிகளாய் மாறுவோம் என்ற சிந்தனையோடு இத்திருப்பலியில் கலந்துகொண்டு இறையருளை வேண்டுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. தூய ஆவியே இறைவா, திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் அனைவரையும் ஆளுகைச் செய்யும். ஞானத்தின் ஆவியே இவர்களுக்கு உமது ஞானத்தை வழங்கி நிறைவாழ்வை நோக்கிய பயணத்தில் இவர்களை வழிநடத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. நிறை உண்மையை நோக்கி வழிநடத்தும் இறைவா, எமது தாய்த் திருநாட்டை ஆளும் தலைவர்களையும், அதிகாரிகளையும், அரசியல் தலைவர்களையும் ஆசீர்வதியும். அதிகாரங்கள், பதவிகள் இவற்றை நீர்தான் வழங்கியுள்ளீர் என்பதை அவர்களுக்கு உணர்த்தி வளமான, செழுமையான, சமாதான பாதையில் மக்களை வழிநடத்திச்செல்ல அவர்களுக்கு நல்ல ஞானத்தையும், தாராள மனதையும் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. புத்துணர்ச்சியூட்டும் ஆவியே இறைவா, ஆண்டவர் இயேசுவின் சாட்சிகளாய் வாழ்வதற்குத் தடையாக இருக்கும் எமது பெருமைகள், மன்னிக்கும் மனமின்மை, தாழ்வு மனப்பான்மை, கீழ்ப்படியாமை, பொறாமை, பணஆசை, கோபம், வைராக்கியம், காமஇச்சை ஆகியவற்றை விட்டுவிடுவதற்குத் தேவையான ஆற்றலையும், சக்தியையும் தந்து இயேசுவின் உண்மையான சாட்சியாக வாழ்வதற்கு வழிகாட்ட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. வரமருளும் வள்ளலே எம் இறைவா, இத்திருப்பலியில் குழுமியுள்ள இறைமக்களை உம்முன் படைக்கின்றோம். ஒவ்வொருவரின் எண்ணங்களையும், ஏக்கங்களையும் நீர் கண்ணோக்கும். உடல் வியாதியோடும், மனவேதனையோடும் வந்திருப்போருக்குச் சுகத்தையும், துக்கத்தில் இருப்பவர்களுக்கு ஆறுதலையும், வேதனையோடு வந்திருப்போருக்கு விடுதலையும், கல்வி பயிலும் பிள்ளைகளுக்கு நல்ல ஞானத்தையும் வழங்கி அனைவரையும் ஆசீர்வதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 26.05.2018 தூய பிலிப்பு நேரி திருப்பலி

**முன்னுரை** திருமதி. டிலைலா சேவியர்

இவர் இத்தாலியில் பிளாரன்ஸ் நகரில் பிறந்தவர். 26 வயதில் வணிகத் தொழிலை விட்டுவிட்டு தமது ஆன்மீக நலனைக் குறித்தும் மற்றவர்களின் ஆன்மீக ஈடேற்றத்தை முன்னிட்டும் உரோமை நகர் சென்றடைந்தார். தத்துவக்கலை, இறையியல் பயின்றதோடு செபத்திலும் தவ முயற்சியிலும் தம்மை மிகவும் ஈடுபடுத்திக்கொண்டார். அந்நகரில் 12மைல் சுற்றளவில் இருந்த புகழ்மிக்க ஏழு தேவாலயங்களையும் மாலையானதும் நடந்தே சந்திக்கும் முயற்சியில் ஈடுபட்டு, இரவில் தூய செபஸ்தியாரின் புதைக்குழி வளாகத்தில் தங்குவார். மேலும் நலிவுற்ற மக்களின் நலன்களைக் கருதி மருத்துவ மனைகளில் நோயாளிகளைச் சந்திப்பார். தெருவழியாகச் செல்லும்போது ஆன்மீகத்தில் அக்கறையற்றவர்களை இனங்கண்டு, தமது திறமையான பேச்சினாலும் அணுகுமுறைகளினாலும் அவர்களை இறைவன் பக்கம் மனம்மாறச் செய்வார். இவரது ஆன்ம குரு இவருக்கு குருத்துவத்தில் ஆர்வம் ஊட்டினர். குருப்பட்டம் பெற்றபின் 33ஆண்டுகளாக "ஆரட்டரி" என்று அழைக்கப்படும் மகிழ்ச்சிக்குழுவை பல குருக்களின் துணையோடு நடத்தினார். இவர்கள் (ஆரட்டோரியன்ஸ்) மகிழ்ச்சிக்குழுவினர் என்று இந்நாள்வரை அழைக்கப்படுகின்றனர்.

இவர் திருப்பலி நிறைவேற்றும்போதெல்லாம் பரவசத்தில் ஆழ்ந்துவிடுவார். இளைஞர்கள் பலரை ஆன்மீக வாழ்வுக்குக் கொண்டு வருவதுடன் அவர்கள் எப்போதும் மகிழ்ச்சியாக இருக்கவும், ஆழமான இறையனுபவம் பெறவும் தாழ்ச்சி, ஒறுத்தல், ஆசைகளைக் கட்டுப்படுத்தல், அடிக்கடி ஒப்புரவு அருட்சாதனத்தைப் பெறுதல் போன்ற புண்ணிய செயல்களிலும்

பயிற்சியளித்தார். இவர் "உரோமை நகரின் இரண்டாம் அப்போஸ்தலர்" என அழைக்கப்பட்டார். ஒருமுறை நற்கருணை உட்கொண்டபின் நன்றி செலுத்தாமல் வெளியேறிய மனிதன் பின்னாலேயே செல்லும்படி எரியும் திரிகள் ஏந்திய இரண்டு சிறுவர்களை அனுப்பி அவனுக்கு நல்ல பாடம் கற்பித்தார். அதன்பின் அம்மனிதன் நன்மை வாங்கியதும் கோவிலிலிருந்து நன்றி செலுத்திய பின்னரே வெளியேறுவான். திருந்த மனமில்லாதவர்களுக்கு சாவின் கொடுமையைப் பற்றிச் சொல்லி திருத்துவார். சிறிய அற்பப் பாவமும் நம்மை நெருங்கவிடாமல் பாதுகாத்தால் சாவான பாவங்கள் நம்மை நெறுங்கா என்று சொல்லி குற்றங்களுக்கு இடந்தராமல் பாதுகாப்பார். இப்புனிதரைப் பற்றித் தெரிந்துக்கொண்ட நாம், இன்றைய திருப்பலியில் இப்புனிதரின் நல்வழிகளைப் பின்பற்றும் வரத்தைத் தரவேண்டுமென்று இறைவனிடம் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல இறைவா, நீர் விட்டுச்சென்ற திருச்சபையின் வளர்ச்சிக்காக உம்மால்ஆசீர்வதிக்கப்பட்டு தெரிந்துக்கொள்ளப்பட்ட திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், துறவறத்தார் அனைவரும் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களை புண்ணிய நெறியில் நடத்திச்செல்லும் அருளையும், ஆசீரையும்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. அன்பே உருவான இறைவா, உமது அன்பின் அடையாளமாக விளங்கும் நற்கருணையை பக்தியோடும், நன்றியோடும் உட்கொள்ளவும், நற்கருணை உமது உயிருள்ள உடல் என்பதை உணர்ந்து தினமும் உம்மை உட்கொள்ளும் வரத்தைப் பெறும் வாய்ப்பைத் தரவேண்டுமென்று மன்றாடுகிறோம்.
3. இரக்கமே உருவான இறைவா, நாங்கள் செய்த பாவங்கள் தவறு என்று உணரும்போது, எங்கள் பாவங்களை மன்னிக்கும் நீர், புனித பிலிப்பு நேரியைப்போல அற்பப்பாவங்களையும் விலக்கி நடக்கும் கிருபையையும் உதவியும் தரவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 27.05.2018 தூய மூவொரு கடவுள் பெருவிழா திருப்பலி

**முன்னுரை** திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்

I. இச. 4:32-34, 39-40 II. உரோ. 8: 14-17 மத். 28:16-20

கிறிஸ்துவில் அன்புமிக்க சகோதர சகோதரிகளே, இன்று திருஅவையானது தூய மூவொரு கடவுள் பெருவிழாவைக் கொண்டாடுகிறது. இறைவன் மூவொரு கடவுளாக இருந்து நம்மோடு பயணிக்கிறார். நம்மோடு பேசுகிற தந்தையாக, உடன் பயணிக்கும் மனிதராக, வழிநடத்தும் ஆவியராக இருக்கிறார். நம்மை அன்போடு அரவணைத்து, நம்பிக்கை கொள்பவர்களை மீட்டுக்கொள்வார். மூவொரு கடவுள் தங்களுக்குள் ஆள்தன்மையில் வேறுபட்டிருந்தாலும் உறவு,

பணிபுரிதல் இவைகளில் ஒன்றுபட்டு இருக்கிறார்கள். மூவொரு இறைவன் நம்மோடு வாழ பயணிக்க அவர்களின் உறவு, ஒற்றுமை, பகிர்வு, புரிதல், ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மை, விட்டுக்கொடுக்கும் மனம் நம் வாழ்வின் ஒவ்வொரு செயலிலும் நிலையிலும் வெளிப்பட வேண்டும். அப்போதுதான் நாம் அனைவரும் மூவொரு இறைவனின் பிள்ளைகளாவோம்.

இன்றைய முதல் வாசகம் இறைவன்மீது நாம் கொண்டுள்ள நம்பிக்கைக் குறித்துக் கூறுகிறது. கடவுள் இருக்கிறார், கடவுள் வல்லவர், கடவுள் நன்மை செய்கிறார் என்றெல்லாம் ஏற்றுக்கொள்வது தான் நம்பிக்கை. ஆயினும், கடவுள் வரலாற்றில் தம்மையே வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார் என்பதே அடிப்படையான நம்பிக்கை. இரண்டாம் வாசகத்தில் நாம் இறைவனின் பிள்ளைகள் என்பதைக் கூறுகிறது. இன்றைய நற்செய்தியில் "நற்செய்தி உலகெங்கும் எடுத்துச் செல்லப்படவேண்டும், மக்களுக்கு அறிவிக்கப்பட வேண்டும்" என்று கூறுகிறது. இயேசுவின் உயிர்ப்பு அன்று திருத்தூதர்களுக்கு ஒரு பலத்தைக் கொடுத்ததுபோல நமக்கும் தூய ஆவியார் புத்துணர்ச்சியையும் பலத்தையும் தரக்கூடியவர் என்பதை உணர்ந்தவர்களாய் இத்திருப்பலியில் இணைந்திடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. பரிவு கொண்டு பாதுகாக்கும் இறைவா, திருஅவையை வழிநடத்தும் எங்கள் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், துறவியர் மற்றும் இயேசுவின் நம்பிக்கையாளர்கள் ஆகியோரைத் தகுந்த வேளையில் எதிரிகளிடமிருந்து பாதுகாத்து பராமரிக்க வேண்டுமென்று திருஅவையை விட்டு மக்கள் வெளியேறிச் செல்லாமல் இருக்க வேண்டுமென்றும் உம்மை மன்றாடுகிறோம்.
2. மூன்றாம் ஆளாகிய தூய ஆவியாகிய இறைவா, எமது நாட்டை ஆளும் தலைவர்கள் அதிகாரிகள் தங்களது ஜனநாயகக் கடமைகளைச் செய்வதன் மூலம் ஏழை, எளிய மக்கள் தங்களின் உரிமைகளை நன்கு பயன்படுத்தி வாழ்வில் முன்னேற துணை நிற்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. மூவொரு இறைவா, தந்தை, மகன், தூய ஆவியாகிய நீவீர் மூவரும் ஒரே செயலும், சிந்தனையும், வல்லமையும் உடையவரர்களாக இருப்பதுபோல, குடும்பங்களிலும் தந்தை, தாய், பிள்ளைகள் ஒருவரையொருவர் அன்பு செய்து, மதித்து, கீழ்ப்படிந்து, சமாதானத்துடன் வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
4. அன்பு இறைவா, நாங்கள் இயற்கை வளங்களை நன்கு பயன்படுத்தவும், அவற்றைப் பாதுகாப்பதில் அளவிட முடியாத அளவில் ஈடுபாடு காட்டவும், மரங்களை நடுதல், பிளாஸ்டிக் உபயோகத்தைக் குறைத்தல், தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல் போன்ற ஆக்கப்பூர்வமான காரியங்கள் செய்யவும் எங்களுக்கு தூய ஆவியானவரின் துணை வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 29.05.2018 அருளாளர் ஜோசப் கொவால்ஸ்கி திருப்பலி

**முன்னுரை** சலேசிய புனிதர்களின் திருப்பலி புத்தகம்

ஜோசப் கொவால்ஸ்கி 1912ம் ஆண்டு போலந்து நாட்டிலுள்ள க்ராகௌ என்னும் ஊரில் பிறந்தார். 1929ம் ஆண்டு சலேசிய சபையில் சேர்ந்தார். தனது முதல் அர்ப்பண நாளன்று தனது ஆன்மீக குறிப்பேட்டில், "இயேசுவே, எனக்கு வலிமையும் உறுதியும் கொண்ட உள்ளத்தைத் தாரும். நான் புனிதராக வேண்டும், உம்மாலன்றி என்னால் ஒன்றும் செய்ய இயலாது. என்னை அன்பு செய்யும் உம்மோடு என்னால் எல்லாவற்றையும் செய்ய முடியும்" என்று எழுதி வைத்திருந்தார். களப்பயிற்சிப் பணியை முடிக்கும் நிலையிலிருந்தபோது தனது மனவலிமையினாலும் ஆன்ம குருவின் வழிகாட்டுதலாலும் அதற்குத் தீர்வு கண்டார். 1938ம் ஆண்டு அவர் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டபின் அவரது மாநிலத்தலைவருக்கு உதவியாளராக இருக்கும் பொறுப்பினை ஏற்றார்.

அந்நேரத்தில் இரண்டாம் உலகப்போர் தொடங்கியது. அப்போது சிறைப்பிடிக்கப்பட்டு, சிறையில் இவரும், இவருடன் பிடிப்பட்ட மற்ற குருக்களும் பல கொடுமைகளுக்கு ஆளானார்கள். அங்கு மனித நேயம் மறுக்கப்பட்டு விலங்கினும் கேவலமாக நடத்தப்பட்டார்கள். அந்நிலையிலும் தனது மனித மாண்பிலே உறுதியாக இருந்து இறையரசைக் கட்டியெழுப்பினார். 1942ம் ஆண்டு பிப்ரவரி 12ம் நாள் எழுதிய கடிதத்தில் "எனது வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் இறைவனது வல்லமையை உணர்கிறேன். நான் எங்கிருந்தாலும் எனக்கு என்ன நேர்ந்தாலும் உலகமனைத்தையும் ஆள்கின்றவரும் ஒவ்வொருவரையும் கண்காணிப்பவருமான, இறைவனின் பராமரிப்பில் நான் இருக்கிறேன்" எனக் குறிப்பிட்டிருந்தது.

1942ஆம் ஆண்டு ஜூன் 2ம் நாள் ஆஸ்விட்ஸ் என்ற இடத்திலிருந்து, டக்காவு என்ற இடத்திலுள்ள சிறைச்சாலைக்கு 60 குருக்களைத் தேர்ந்தெடுத்தார்கள். அதில் தந்தை கொவால்ஸ்கியும் ஒருவர். அவர் தனது கையில் செபமாலை ஒன்றை வைத்திருப்பதைக் கண்டறிந்த சிறை அதிகாரி அதைக் காலால் மிதிக்கச் சொன்னார். அதைச் செய்ய மறுத்ததால் அவரை டக்காவுக்கு அனுப்பாமல் ஆஸ்விட்ஸ் என்ற இடத்திலே கொடூரமாக நடத்தினார். அவரைக் கொல்வதற்காக அழைத்து சென்றபோது, அவர் தன்னிடமிருந்த ரொட்டித் துண்டுகளைத் தம் நண்பர் சிஜிஸ்போண்டி கொலன்கொவால்ஸ்கியிடம் கொடுத்து "இதைப் பெற்றுக்கொள், இது எனக்கு இனி தேவைப்படாது" என்று கூறினாராம்.

பிறகு அவர் "எனக்காகவும் என்னைத் துன்புறுத்துவோருக்காகவும் செபியுங்கள்" என்று உரத்த குரலில் கூறினார். அவரைத் துன்புறுத்தியபின் கழிவு நீர்த்தொட்டியில் உயிரோடு அமிழ்த்திக் கொன்றனர். அப்போது அவருக்கு வயது 31. இரண்டாம் உலகப்போரின்போது மறைசாட்சியாக இறந்த இவரையும், இவரோடு சேர்ந்த 108 பேரையும் திருத்தந்தை

இரண்டாம் அருள் சின்னப்பர், 1999ம் ஆண்டு 12ம் நாள் அருளாளர் நிலைக்கு உயர்த்தினார். நம்பிக்கைக்கு சான்று பகரும் இறைவனின் பண்பு நம்மில் வளரவும், இயேசுவுக்காக தன்னையே வழங்கும் தியாகத்தை நாமும் பெறவும் வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## விசுவாசிகளின் மன்றாட்டு

**பதில்:** ஆண்டவரே எம் வேண்டுதலுக்குச் செவிசாய்த்தருளும்.

1. திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் தங்களின் அழைத்தலின் மேன்மையை உணர்ந்து, இறைமக்களை நம்பிக்கையில் உறுதியடையச் செய்து, இறையரசின் உன்னத சாட்சிகளாக வழிநடத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. துறவறப் பணியிலும், மறைக்கல்விப் பணியிலும், மறைப்பரப்புப் பணியிலும் ஈடுபட்டுள்ளோர் அனைவரும் தங்களின் வாழ்வில் வரும் இடர்கள், இடையூறுகள், துன்பங்கள், சோதனைகள் ஆகியவற்றைப் பொறுமையுடன் தாங்கி, இறையாட்சியை இந்த மண்ணிலே தொடர்ந்து கட்டியெழுப்ப வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. இங்கு கூடியிருக்கும் உம் மக்களாகிய நாங்கள் எங்கள் வாழ்வில் வரும் இன்னல்களையும், இடையூறுகளையும், சோதனைகளையும், வேதனைகளையும் பொறுமையுடன் தாங்கி உமது வார்த்தையை வாழ்வாக்கி உமக்கேற்ற சாட்சிகளாய் வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 31.05.2018 தூய கன்னிமரியா எலிசபெத்தைச் சந்தித்த விழா திருப்பலி

**முன்னுரை** திருமதி. பத்மாவதி

இன்று நாம் தூய கன்னிமரியா எலிசபெத்தைச் சந்தித்த விழாவைக் கொண்டாடுகிறோம். எலிசபெத் என்றால் "இறைவன் என் நற்பேறு " என்பது பொருள். எலிசபெத் அபியா வகுப்பைச் சார்ந்த குரு சக்கரியாவின் மனைவி இவர்கள் யூதேயாவின் மலைநாட்டிலுள்ள அயின்கெரேமில் வாழ்ந்தனர். (இவர்கள்தான் திருமுழுக்கு யோவானின் பெற்றோர்) நெடுங்காலமாக குழந்தையில்லாது தவித்த எலிசபெத் வயது முதிர்ந்த நிலையில் கடவுளின் தூதர் அறிவித்ததின்படி, கருவுற்றிருந்தார் (லூக்.1:13).

இந்நிலையில் அவரைச் சந்திக்க இயேசுவின்தாய் மரியா செல்கிறார் இறைவனின் ஆசீர்வாதத்தைக் கொண்டு செல்கிறார். மரியா எலிசபெத்தை வாழ்த்தினார். மரியாவின் வாழ்த்தைக் கேட்டவுடன் எலிசபெத்தின் வயிற்றிலிருந்த குழந்தை மகிழ்ச்சியால் துள்ளிற்று.

தூய ஆவியால் முற்றிலும் ஆட்கொள்ளப்பட்ட எலிசபெத் மரியாவை வாழ்த்தினார். இறைவனின் தனிப்பெரும் கருணையைச் சுவைத்த இருவரும் சந்தித்துக்கொண்ட இந்நிகழ்வை பிரான்சிஸ்கு துறவற சபையினர் 1263ஆம் ஆண்டு முதன்முதலில் கொண்டாடினார்கள். பின்னர் திருத்தந்தை ஆறாம் ஹர்பன் 1389ல் உலகளாவிய விழாவாக்கினார்.

தற்போது இந்த விழாவானது இயேசு பிறப்பு அறிவிப்பிற்கும் மார்ச் 25 திருமுழுக்கு யோவானின் பிறப்பிற்கும் ஜூன் 24 இடையில் மே 31 அன்று கொண்டாடப்படுகிறது. வயதான எலிசபெத்தை மரியா (இறைவனின் தாய்) தேடிச்சென்று, ஏறக்குறைய மூன்று மாதங்கள் தங்கியிருந்து உதவிச்செய்து வீடு திரும்பினார். தூய கன்னிமரியாவைப்போல் நாமும் இயலாத நிலையில் உள்ளவர்களைத் தேடிச்சென்று உதவுவோம், அன்னையின் பிள்ளைகள் நாம் என்பதினை செயலில் காட்ட இறையருள் வேண்டி இத்திருப்பலியில் பக்தியுடன் பங்கேற்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. விண்ணகத் தந்தையே இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் அனைவரும் உமது தூய ஆவியின் துணையோடும், ஆற்றலோடும், வல்லமையோடும் பணிபுரிந்திட அருள்புரியும்படி உம்மை மன்றாடுகிறோம்.

2. இரக்கத்தின் தந்தையே இறைவா, இன்றைய கலாச்சாரத்தில் பலதரப்பட்ட கலப்படமான உணவுப்பொருட்களால் பாதிக்கப்பட்டு, நோய்களோடு துன்பப்படும் உமது மக்களைக் கண்ணோக்கும். அவர்களின் நோய்களை நீக்கி நலமளித்திட உம்மை மன்றாடுகிறோம்.

3. கருணையின் கடலே எம் இறைவா, தூய கன்னிமரியின் கருணை மனம் கொண்டவர்களாய், எங்களைச் சூழ்ந்துள்ள மக்களின் ஏழ்மை நிலையினைக் கண்டு, வாழ்வில் கைவிடப்பட்டோர், தனிமையில் தவிப்போர், ஏழ்மையில் வாடுவோர், வாழ்வைத் தொலைத்துவிட்டு தடுமாறுவோர் இவர்களுக்கு தாராள மனதுடன் உதவிபுரிய எங்களுக்குத் தேவையான நல்ல மனத்திடனை அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. அன்பு தந்தையே இறைவா, இன்று தூய கன்னிமரியா எலிசபெத்தைச் சந்தித்த விழாவினை சிறப்பிக்கின்ற வேளையில், இங்கு கூடியுள்ள அனைத்துப் பெண்களையும் உமது பாதம் சமர்ப்பிக்கின்றோம். இவர்களும் உம் அன்னையின் வழிகாட்டுதலின்படி வாழ அவர்களுக்குத் தேவையான அனைத்து அருள்வரங்களையும், கனிவான உள்ளத்தையும் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

# பகுதி - 2 விசுவாசத்தில் வளர...

## தூய ஆவியே துணையாளரே

திரு. P. விக்டர்

நமது கத்தோலிக்கத் திருச்சபையின் வழிபாட்டு கால அட்டவணையில் உயிர்த்த ஞாயிறுக்குப்பின் வரும் 50வது நாளில் தூய ஆவியின் விழாவைக் கொண்டாடுகிறோம். தூய ஆவியானவர் முதன்முறையாக திருத்தூதர்கள்மீதும் மற்றவர்கள்மீதும் பொழியப்பட்ட பொழுதுதான் (தி.தூ. 2:4). திருச்சபை துவக்கப்பட்டதாகக் கொண்டாடி வருகின்றோம். இந்த தூய ஆவியாரின் விழாவானது ஏதோ இடையில் ஏற்பட்ட விழாவன்று. மாறாக, இது திருச்சபையின் துவக்க காலத்திலிருந்தே கொண்டாடப்பட்டு வரும் ஒரு முக்கியமான விழாவாகும்.

### யார் இந்த தூய ஆவியானவர்?

ஆண்டவர் இயேசுவினால் அறிமுகப்படுத்தப்பட்டு, அவரால் விண்ணகத் தந்தையிடமிருந்து அனுப்பப்பட்டவர்தான் இந்த தூய ஆவியானவர் (யோவா. 14:26). அறிமுகத்திலேயே "துணையாளர்" என்றுதான் இயேசு இவரை அறிமுகப்படுத்துகிறார் (யோவா. 16:7). தந்தை, மகன், தூய ஆவி ஆகிய தமத்திரித்துவத்தில் மூன்றாம் ஆளாக இவரைத் துணையாளராக திருவிவிலியம் நமக்கு அறிமுகப்படுத்துகிறது. தொடக்க நூலில் தந்தை இந்த உலகை உண்டாக்கினபொழுது நீர்த்திரள்மீது அசைவாடிக்கொண்டிருந்தவர் இத்தூய ஆவியானவர்தான் (தொ.நூ.1:2). திருத்துவத்தின் முதல் ஆளாகிய தந்தையாம் கடவுள் இந்த உலகை உண்டாக்க விரும்பினார். தந்தையின் விருப்பம் இரண்டாம் ஆளாகிய மகனாக-வார்த்தையாக வெளிப்பட்டது. வெளிப்பட்ட வார்த்தையின் செயலை நிறைவேற்றி முடித்தவர் மூன்றாம் ஆளாகிய இந்தத் தூய ஆவியானவர் (தொ.நூ.1:2-26). புதிய ஏற்பாட்டிலும் இம்மூவரின் செயல்களை ஒருசேரப் பார்க்கலாம். இயேசு திருமுழுக்கு பெறுகிறார்.

பரிசுத்த ஆவியானவர் புறாவின் வடிவில் புலப்படும் வடிவெடுத்து இயேசுவின்மீது தங்குகிறார். விண்ணிலிருந்து "இவரே என் அன்பார்ந்த மகன்" என்று பிதாவின் குரலொளி ஒலிக்கின்றது (மத். 3:17). மேலும் திருத்தூதர் பணியில் ஸ்தேவானைக் கல்லால் எறிந்து கொலைசெய்ய முற்படுகையில் "அவர் பரிசுத்த ஆவியால் நிறைந்தவராய் வானத்தை உற்றுப்பார்த்து கடவுளின் மாட்சியையும் அவரது வலப்பக்கம் இயேசு நிற்பதையும் கண்டார்" (தி.ப. 7:55). மேற்கூறிய நிகழ்வுகளிலிருந்து "தூய ஆவியார் கடவுள் என்பதையும் தமத்திருத்துவத்தின் மூன்றாம் ஆள் என்பதையும் அறியமுடிகிறது. இந்த நம்பிக்கையின் அடிப்படையில் தூய ஆவியாரின் பணிகளில் ஒருசிலவற்றை திருவிவிலியத்தின் ஆதாரத்தோடு பார்ப்போம்.

**முதல் பணி:** தூய ஆவியானவரின் முதல்பணி இவ்வுலகில் அவர் நமக்குத் துணையாளராக இருப்பதுதான். "தூய ஆவி உங்களிடம் வரும்போது, "நீங்கள் கடவுளது வல்லமையைப் பெற்று எருசலேமிலும், யூதேயா, சமாரியா முழுவதிலும் உலகின் கடையெல்லைவரைக்கும் எனக்கும் சாட்சிகளாய் இருப்பீர்கள்" (தி.ப. 1:8) என்று ஆண்டவராகிய இயேசு நமது சீடர்களிடம் சொன்னார். இந்த "வாக்கு" திருத்தொண்டர்கள் வாழ்வில் பலித்தது. திருத்தொண்டர்கள் ஒவ்வொருவரும் உலகின் வெவ்வேறு இடங்களுக்குச் சென்று இயேசுவின் நற்செய்தியைப் பறைசாற்றினர். இயேசு மரித்தவுடன் யூதர்களுக்கு அஞ்சி தாங்கள் தங்கியிருந்த வீட்டைவிட்டு வெளியில் வருவதற்கும் தயங்கிய சீடர் அனைவரும் தூய ஆவியானவரைப் பெற்ற பின்பு துணிச்சல் பெற்று அங்கு கூடியிருந்த மக்களிடையே இயேசுவின் நற்செய்தியை அறிவிக்கின்றனர். எபிரேயர்களாகிய அவர்கள் பேசிய எபிரேய மொழி அங்கு கூடியிருந்த சுமார் 17 நாடுகளைச் சேர்ந்த மக்களும் தங்கள் தங்கள் தாய்மொழியில் அவற்றைக் கேட்டு வியந்தனர்.

**இரண்டாவது பணி:** "உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார் வரும்பொழுது அவர் முழு உண்மையை நோக்கி உங்களை வழிநடத்துவார். அவர் தாமாக எதையும் பேசாமல் அவர் என்னிடமிருந்து கேட்டு உங்களுக்கு அறிவிப்பார்" (யோவா. 16:13,14) என்று தூய ஆவியார் குறித்து இயேசு கூறியுள்ளார். இந்தத் தூய ஆவியின் ஏவுதலினாலேயே கடவுளின் மனிதர்கள் இந்தத் திருவிவிலியத்தை எழுதினார்கள் (2பேதுரு 1:1). அதனால்தான் இந்தத் திருவிவிலியம் இத்தனை நூற்றாண்டுகளைக் கடந்தாலும் பல்வேறு ஜாதி, மொழி, நாடுகளின் மக்கள் இருந்தாலும் இன்றைக்கும் நிலைத்து நிற்கிறது என்றும் நிலைத்து நிற்கும். ஒவ்வொரு நாளும் புதிய புதிய கருத்துக்களைக் கற்றுத் தருகிறது. நமது இந்திய தேசியத் தந்தை காந்தியடிகளை வழிநடத்தினதும் இந்த வார்த்தைகள் தான். இன்றைய அமெரிக்காவின் அதிபர் டொனால்ட் டிரம்பை வழிநடத்தி வருவதும் இந்த வார்த்தைகள்தான். ஏனெனில் இந்த வார்த்தை உயிருள்ளது, ஆற்றலுள்ளது. ஊனையும் எலும்பையும் ஊடுறுவக்கூடியது (எபி. 4:12). இந்த வார்த்தைகளை தூய ஆவியாரின் துணையோடு வாசிப்போம், தியானிப்போம் அவற்றை வாழ்வாக்குவோம். அவரின் சாட்சிகளாய் வாழ்வோம்.

**மூன்றாவது பணி:** தூய ஆவியார் தமது வரங்களினாலும், வல்லமைகளினாலும் நம்மை நிரப்பி உதவி செய்கிறார். ஒரு மனிதனின் ஆவிக்குரிய சிறப்பான வாழ்வுக்குத் தேவையான ஞானம் நிறைந்த சொல்வளத்தைத் தருகின்றார். நம்பிக்கையைத் தருகின்றார், பிணி தீர்க்கும் கொடையினைத் தருகின்றார். வல்லச் செயல்களைச் செய்யும் ஆற்றலைத் தருகின்றார். பல்வகை பரவசப்பேச்சு பேசும் ஆற்றலையும் தருகின்றார். அதை விளக்கும் ஆற்றலையும் தருகின்றார்.

இவற்றையெல்லாம் தம் விருப்பம்போல் ஒவ்வொருவருக்கும் பகிர்ந்தளித்து துணைச் செய்கின்றார் (1கொரி. 12:4-11). அதுமட்டுமன்று, அவரது கனிகளான அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம் ஆகியவற்றை நமக்குத் தந்து (கலா.5:22) இந்த உலகில் இயேசுவின் உண்மையுள்ள சாட்சிகளாக வாழ்வதற்கு தூய ஆவியார் துணை செய்கிறார். இத்தகைய சாட்சிய வாழ்வுதான் அநேக மக்களும் இயேசுவை ஏற்றுக்கொள்ளச் செய்யும் உந்து சக்தியாக விளங்குகிறது. நமது சாட்சிய வாழ்வு எவ்வாறு உள்ளது?

**நான்காவது பணி:** நீதிக்கான நமது போராட்ட நேரங்களில் என்னபேசுவது? எப்படி பேசுவது? என்பதை அந்த நேரத்தில் தூய ஆவியாரே நம் சார்பாய் பேசுவார் (மத். 10:19-20). கோயிலின் வாயிலில் பிச்சைக்கேட்ட கால் ஊனமுற்றவனை பேதுருவும் யோவானும் குணமாக்கினர். அதற்காகக் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்படுகையில், தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு அவர்கள் பேசிய பேச்சின் காரணமாக, அவர்களது துணிவைக் கண்டு வியந்தவர்களாய் அவர்களைத் தண்டிக்காமல் விட்டுவிட்டனர் (இச. 4:13). ஏனெனில் தூய ஆவி எங்குண்டோ, அங்கு விடுதலையுண்டு (2கொரி.3:17). கடவுள் நமக்குக் கோழையுள்ள ஆவியை அன்று, உண்மையும் அன்பும் கட்டுப்பாடும் கொண்ட உள்ளத்தையே வழங்கியுள்ளார் (2திமொ.1:7).

பவுலும், சீலாவும் பிலிப்பி நகரில் நற்செய்தி அறிவித்ததற்காக, கைது செய்யப்பட்டு, தடிகளால் அடிக்கப்பட்டு உட்சிறையில் தள்ளப்பட்டு கால்களைக் கழுமரத்தில் இரும்புச் சங்கிலிகளால் கட்டப்பட்டனர். இந்த நிலையில் ஆவியானவரால் நிறைந்தவராய் பவுலும் சீலாவும் கடவுளைப் புகழ்ந்து பாடினர் (இச.16:22-26). சிறைக்கூடம் அதிர்ந்தது. கால் விலங்குகள் கழன்று விழுந்தன. இவற்றைக்கண்ட சிறைக்கூடத் தலைவன் இயேசுவை ஏற்றுக்கொண்டு அவனும் அவனது குடும்பத்தாரும் திருமுழுக்குப் பெற்றனர். துன்ப வேளைகளில், சோதனைகளை, வேதனைகளைத் தாங்கும் மனவலிமையைக் கொடுத்து பாதுகாக்கின்றவர் தூய ஆவியானவர் ஆவார்.

## தூய மசரெல்லோவின் வாழ்வு - நமக்கு தரும் பாடங்கள்

திரு. ஜான் அலெக்ஸ்

இத்தாலி நாட்டில் மோர்னேஸ் என்னும் ஊரில் 1837 மே 9ம் நாள் பிறந்தவர் மரிய தொமினிக்கா மசரெல்லோ. அன்றாடம் உழைத்தால் மட்டுமே வாழ முடியும் என்ற நிலையில் வாழ்ந்த பெற்றோருக்குப் பிறந்தவர் இவர். இருப்பினும் எப்போதும் மகிழ்ச்சியுடன் வாழும் பழக்கத்தையும், எல்லோரையும் மதித்துப் பழகும் பண்பு கொண்டிருந்தார். தனது பங்கு தந்தை அருட்பணி. பெஸ்டாரினோ உருவாக்கிய அமல அன்னை சகோதரிகள் என்ற அமைப்பில் தனது 15ம் வயதில் உறுப்பினராகி, அடுத்தடுத்த ஊர்களுக்குச் செல்லும்போதெல்லாம் அங்கிருந்த சிறுவர்,

சிறுமிகளைப் பராமரிப்பதே முக்கிய பணியாக கொண்டிருந்தார். இவரது அன்பில் எண்ணற்ற இளம் சிறுவர் சிறுமிகள் நனைந்தார்கள். தனது 23வயதில் நகர் முழுதும் டைப்பாய்டு காய்ச்சல் பரவியது. அந்நேரத்தில் கிராமங்களுக்குச் சென்று நோயுற்றவர்களுக்கு உதவிகளைச் செய்து மரித்தவர்களை அடக்கம் செய்யும் பணியிலும் ஈடுபட்டார். ஓய்வின்றி உழைத்த மசரெல்லோவிற்கும் டைப்பாய்டு தொற்றியது. படுத்த படுக்கையாகி சாவின் வாயிலைத் தொட்டு நின்றார். இறைவனது அருளால் நலம்பெற்றார். ஆனாலும் முன்பிருந்த வேகம் குறைந்து நோயின் தாக்கம் அதிகமாக காணப்பட்டது.

ஒரு நாள் நடந்துவரும் வழியில், எதிரே மிகப்பெரிய கட்டிடம் இருப்பது போலவும் அதன் முற்றத்தில் பெண் குழந்தைகள் விளையாடுவது போலவும் காண்கிறார். அப்போது "இவர்களை உன்னிடம் ஒப்படைக்கிறேன்" என்ற குரலொலியைக் கேட்கிறார். இதே போன்ற அனுபவத்தை புனித தொன் போஸ்கோவும் பெற்றார். முற்றத்தில் கைவிடப்பட்ட பெண் குழந்தைகள் விளையாடிக் கொண்டிருப்பதையும் "இவர்கள் எனது குழந்தைகள். இவர்களைக் கவனித்துக்கொள்" என்ற குரலையும் கேட்டார். தூய ஆவியார் இருவரின் மனதிலும் செயலாற்றினார். மசரெல்லோ, அமல அன்னை சகோதரிகள் அமைப்பில் இருந்த 15 இளம் பெண்களையும் ஆன்மீகத்தில் வளர்த்தெடுத்தார். இவர்களை தனி இல்லத்தில் ஒரு குழுமமாக வாழ வைத்தார். இந்த சகோதரிகள் பின்னாளில் சில சிறுமிகளைத் தங்கள் இல்லத்தில் சேர்த்தார்கள். அவர்களுக்கு கிறிஸ்தவ நம்பிக்கை மற்றும் தையல் தொழில் கற்றுக்கொடுத்தார்கள்.

ஏற்கனவே இதே போன்று குருக்கள் மற்றும் சகோதரர்களுடன் தொன் போஸ்கோவின் சலேசிய சபையினர் மாணவர்களை வழிநடத்தி வந்தார்கள். இளம் பெண்களுக்கும் அதே போன்ற அமைப்பு வேண்டும் என்று நினைத்த தொன் போஸ்கோ இந்த சகோதரிகளது அமைப்புக் குறித்து கேள்விப்பட்டார். அவர்களின் அர்ப்பணிப்புக்கு மேலும் உயிரூட்ட நினைத்த போஸ்கோ, அந்த அமைப்பை சலேசிய சகோதரிகள் சபையாக உருவாக்க முடிவெடுத்து அவர்களைச் சந்தித்து சம்மதத்தையும் பெற்றார். அவ்வமைப்பில் இருந்த 15 பேரையும் வைத்து "கிறிஸ்தவர்களின் சகாய அன்னையின் புதல்வியர்கள் சபை" யை 1872ல் உருவாக்கினார். மரிய மசரெல்லோ அதன் முதல் தலைவியாகத் தேர்வானார். அறிவு தேடலுடன் நிற்காது பணிகளை விரிவுபடுத்தினார். தென் அமெரிக்காவிற்கு சகோதரிகளை அனுப்பினார். அவர்களை ஊக்கப்படுத்த அவர்கள் பணியாற்றிய இடங்களைச் சென்று பார்வையிட்டார். அந்தப் பயணங்களில் கப்பல் சிதைவில் சிக்கி நோயுற்றார். மரணப்படுக்கையில் இருந்த போது தம் சகோதரிகளிடம் "அன்னை மரியாவே நமது சபையின் தலைவி. ஒருவர் மற்றவருக்கு உதவி செய்யுங்கள். ஆனால் உங்களுக்காக நியமிக்கப்படும் ஆன்ம குருவிடம் உங்கள் கை எப்போதும் இருக்கட்டும்" என்றார். 1881 மே 14ல் மறைந்தார். 1951 ஜுன் 24ல் திருத்தந்தை 12ம் பத்திநாதர் இவரை

புனிதராக உயர்த்தினார். மரிய மசரெல்லோ செப வாழ்வின் முன்மாதிரி என்றால் அது மிகையாகாது. அவரது செப வாழ்வின் அனுபவங்கள் மற்றும் பலன்களைப் பின்வரும் நிலைகளில் நாம் நன்றாக உணர்ந்து கொள்ளமுடியும்.

**சவால்கள்:** தன் முதல் மறைப்போதக பணியாளர்களுக்கு அவர் சொன்ன வார்த்தை "உங்களால் இயன்றவரை இறைவனோடு ஒன்றித்திருத்தலையும் அவரது பிரசன்னத்தில் நிலைத்திருப்பதையும் கவனித்துக் கொள்ளுங்கள்" என்பதே. இன்றைய வாழ்க்கைச் சூழலை எடுத்துக் கொண்டால், நம்முடைய செப வாழ்வு என்பது எத்தகைய நிலையில் இருக்கிறது என சிந்திக்க வைக்கிறது.

**"மோர்னேசில் காணப்படும் செபத்தின் பாணி:** மோர்னேஸ் என்பது மரிய மசரெல்லோவின் அதாவது சலேசிய அருட்சகோதரிகள் சபையின் தாயகம். இறைவனோடு உரையாடுவதும், இன்ப துன்பங்கள் கலந்த வாழ்வில் செபமே மையமாக கொண்டாடப்படுவதும் போற்றப்படுவதும் மோர்னேசின் செப பாணி ஆகும்.

**அன்பை அனுபவிக்கச் செய்யும் செபம்:** இளையோருக்குச் செபிக்கக் கற்றுக்கொடுப்பதே அவர்களை அன்பு செய்வதற்கு ஈடாகும். அவர்களை இறைவனின் பிரசன்னத்தில் நிலைத்திருக்கச் செய்வதும் புனிதத்துவத்தின் முறையை ஊட்டுவதுமாகும்.

## மூவொரு இறைவன் - ஒரே கடவுள்

திரு. புல்லோன் ஜோ லூயிஸ்

இறைவன் ஒருவரே, ஒருவர்க்குமேல் இறைவன் உண்டு என்றால், அவர் இறைவனாக இருக்கமுடியாது. ஆனால் அந்த ஒரே இறைவன் மூன்று ஆட்களாய் இருக்கிறார். இது நமது நம்பிக்கை. இது மறைபொருள். ஆம். "தந்தை, மகன், தூய ஆவி" இதுவே நம் தாரக மந்திரம். இந்த மறைப்பொருளை நம்மால் நம்ப முடியுமே தவிர, நம் அறிவைக் கொண்டு மழுமையாகக் விளக்குவதோ, அல்லது புரிந்து கொள்வதோ மிகவும் கடினம். நம்மால் இறைத் தன்மையை முழுமையாக அறிந்துக்கொள்ள முடியுமென்றால் அவர் இறைவனாக இருக்க முடியாது. எல்லாவற்றையும் கடந்த இறைவன் நமது அறிவையும் ஆற்றலையும் கடந்தவர். யோபு 11:7 கடவுளின் ஆழ்ந்த உண்மைகளை நீர் அறிய முடியுமா? எல்லாம் வல்ல இறைவனின் எல்லையைக் கண்டுணர முடியுமா? இதனையே இவ்வாசகம் நமக்கு விளக்குகிறது.

முப்பது ஆண்டுகள் தமதிரித்துவ மறைப்பொருளைத் தியானித்து 15 புத்தகங்களை எழுதிய புனித அகுஸ்தினாருக்கு, இத்தத்துவத்தை ஒரு குழந்தை புரிய வைத்தது. எப்படி ஒரு சிறு குழியில் கடல் தண்ணீர் முழுவதையும் கொண்டு வந்து நிரப்ப இயலாதோ அதுபோன்றே தனம் சிறிய அறிவைக் கொண்டு தமதிரித்துவத்தை அறிந்துக்கொள்ள முடியும் என்பது

குதிரைக்கொம்பு என்பதை பரிபூரணமாக உணர்ந்தார். திரித்துவத்தை முழுமையாக அறிந்துகொள்ள முயற்சிப்பவன் தன் சிந்தனையை இழந்து விடுவான். திரித்துவத்தை மறுதலிக்கின்றவனோ, தனது ஆன்மாவை இழந்துவிடுவான். திரித்துவம் என்ற வார்த்தை திருமறையில் இல்லை. ஆனால் திரித்துவ கடவுள் திருமறையில் இருக்கிறார்.

நம்மைப் படைத்தக் கடவுள் நம்மோடு என்றும் இருக்கிறார். அவரது உயிரில் கலந்ததுதான் நம் உயிரும் (தொ.நூ. 2:7). நம்மோடு இருக்கும் கடவுள் தந்தை, மகன், தூய ஆவியாரென்று மூன்று ஆட்களாயிருக்கிறார்கள். இதுதான் நம் விசுவாசத்தின் சாரம். ஆம் அன்பு, அமைதி, அழகு ஆகிய மூன்றும் தனித்தனி பண்புகளாக இருந்தாலும் எப்படி ஒரே மனிதனிடத்தில் நிறைந்திருக்கின்றவோ, அதுபோலவே அழகான உலகைப் படைத்த தந்தையும், அன்பே உருவாகன மகனும், அமைதியை நிலைநாட்டுபவராகிய ஆவியானவரும் ஒரே ஆளாக இருப்பதில் ஆச்சரியம் இல்லை. அன்பும், அமைதியும், அழகும் ஒரு மனிதனிடத்தில் எப்படி வெளிப்படுகின்றனவோ, அதுபோலவே தந்தையும், மகனும், தூய ஆவியானவரும் ஒரே கடவுளின் வெளிப்பாடுகள். படைப்பின் அழகை வெளிப்படுத்தும்போது தந்தையாகவும், அன்பை வெளிப்படுத்தும்போது மகனாகவும், ஆற்றலை வெளிப்படுத்தும்போது தூய ஆவியானவராகவும் செயல்படுகிறார்கள். நமது அன்றாட வாழ்வில் பார்க்கும், பயன்படுத்தும் பொருட்களும் நமக்கு தமதிரித்துவத்தைப்பற்றி அருமையாக வெளிப்படுத்துகின்றன.

**முட்டை:** ஓடு, மஞ்சள்கரு, வெள்ளைக்கரு இவை மூன்றும் சேர்ந்ததுதான் முட்டை என்கிறோம். இதுபோன்றே தந்தை, மகன், தூய ஆவியானவரும் ஒரே கடவுள்.

**தண்ணீர்:** நீர், பனிக்கட்டி, நீராவி என்ற மூன்று நிலைகளை உடையது தண்ணீர். அவ்வாறேதான் தமதிரித்துவமும்.

**மரம்:** இலைகளையோ, கிளைகளையோ, வேரையோ நாம் மரமாகச் சொல்வதில்லை. இம்மூன்றும் இணைந்ததையே மரம் என்கிறோம். இப்படித்தான் தமத்திரித்துவமும்.

**பழைய ஏற்பாட்டில் திரித்துவம்**

இறைவன் ஒருவரே என்பது இஸ்ரவேயலர் ஏற்றுக்கொண்ட உயர் போதனை. அப்படியிருந்தும் அந்த ஒரே இறைவனை பன்மையில் வெளிப்படுத்தியிருப்பதைக் காண்கின்றோம். அப்பொழுது கடவுள், "மானிடரை நம் உருவிலும், நம் சாயலிலும் உண்டாக்குவோம்" (தொ.நூ. 1:26) என்றார். பாபேல் கோபுரத்தைக் கட்டியபோது "வாருங்கள், நாம் கீழேபோய் அங்கே ஒருவர் மற்றவரின் பேச்சைப்புரிந்து கொள்ள முடியாதபடி அவர்கள் மொழியில் குழப்பத்தை உண்டாக்குவோம்" (தொ.நூ.11:7). மேற்கூரிய வசனங்களைக் கூர்ந்து நோக்குவோமேயானால்

கடவுள் தம்மைப் பன்மையில் கூறியிருப்பதால், தமதிரித்துவ கொள்கை, எண்ணம் பழைய ஏற்பாட்டுக் காலத்திலிருந்தே இருந்திருக்கிறது என்பதைக் காண்கிறோம். "ஒன்றில் மூன்று, மூன்றில் ஒன்று" என்பது இங்கே உண்மையாகிறது.

**புதிய ஏற்பாட்டில் தரித்துவம்**

பழைய ஏற்பாட்டில் மறைந்திருந்த திரித்துவம், புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் மூலம் வெளிப்பட்டது. இறைவன் ஒருவரே என்பது சத்தியமானாலும், அந்த ஒரே இறைவனுக்குள் தந்தை, மகன், தூய ஆவியார் என்னும் மூவர் உண்டு என்று வெளிப்பட்டதால், ஒத்தமைவை நற்செய்தியாளர்கள் தெளிவாக விளக்குகிறார்கள். இறைவனில் விளங்கும் பன்மை இன்னதென்று கிறிஸ்து உலகுக்கு வந்தபோதுதான் தெளிவாயிற்று. "இயேசு திருமுழுக்குப் பெற்றவுடனே தண்ணீரிலிருந்து வெளியேறினார். உடனே வானம் திறந்ததையும் கடவுளின் ஆவி புறா வடிவில் இறங்குவதுபோல தம்மீது வருவதையும் கண்டார். அப்பொழுது "என் அன்பார்ந்த மைந்தர் இவரே. இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்" என்று வானத்திலிருந்து ஒரு குரல் கேட்டது (மத். 3:17). தாபோர் மலையில் உருமாற்றம் பெற்றபோது அந்த மேகத்திலிருந்து "என் அன்பார்ந்த மைந்தர் இவரே, இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன், இவருக்குச் செவி சாயுங்கள்" என்று குரல் ஒலித்தது (மத். 17:5). இதன்மூலம் இம்மூவருக்குள் சரியான, நிலையான, ஆழமான உறவு உண்டு என்பது தெளிவாகிறது. இதைவிட மேலாக, இயேசு இம்மூவரைப்பற்றிப் பேசுகிறார். "எனவே நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள், தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள்" (மத்.28:19) என்றார்.

**நம் வாழ்வில் மூவொரு இறைவன்**

தம்மிலே உறவோடு அன்பில் பிணைக்கப்பட்டு, செயல்படுகின்ற இம்மூவொரு கடவுள் நம்முடைய வாழ்வில் பலநிலைகளில் தொடர்பு கொண்டுள்ளார்.

1. ஒவ்வொரு முறையும் தந்தை, மகன், தூய ஆவி என்று சொல்லி சிலுவை அடையாளம் வரைகின்றபோது அவர்களை நினைக்கின்றோம்.
2. ஒவ்வொரு முறையும் சிலுவை அடையாளம் வரைந்து எந்த வேலையைத் துவக்கினாலும் அவர்களை நினைக்கிறோம்.
3. விசுவாசப் பிரமாணத்தைச் சொல்லும்போதும் பாடுகின்ற போதும் மூவொரு இறைவனை விசுவசிக்கின்றோம் என்று முடிக்கின்றோம்.

மேற்சொன்ன மூன்றும் நம்முடைய செபத்தில் நினைவு கூறப்படுவன. இவை வாழ்வாக்கப்பட வேண்டுமென்றால் அதே மூவொரு இறைவன் நம் வாழ்வில் இரண்டறக் கலக்க வேண்டும். இம்மூவொரு இறைவனின் பெயரால் நாம் திருமுழுக்குப் பெற்றிருக்கின்றோம்.

எனவே நம்மில் அழகு, அன்பு, அமைதி குடிகொள்ள வேண்டும். உறவு, ஒற்றுமை, பகிர்வு, புரிதல், ஏற்றுக்கொள்ளும் மனம், விட்டுக்கொடுக்கும் மனம் நம் வாழ்வின் ஒவ்வொரு செயலிலும் நிலையிலும் வெளிப்பட வேண்டும். இந்த உலகம் படைப்பின் அழகை ரசித்து அந்தப் படைப்புகளை அன்பு செய்து, அந்தப் படைப்புக்களை அமைதியில் வாழச் செய்வதே நமது கடமை (2கொரி. 13:13) இவ்வசனத்தைத்தான் திருப்பலித் தொடக்கத்தின் வாழ்த்தொலியாக திருச்சபை வைத்திருக்கிறது. "நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அருளும், கடவுளின் அன்பும், தூய ஆவியின் நட்புறவும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக". இந்த வாழ்த்தொலியோடுதான் நாம் திருப்பலியைத் தொடங்குகிறோம்.

பைசாண்டின் சொல்வதுபோல், தந்தையாகிய இறைவன்மீது நம்பிக்கைக்கொண்டு, மகனாகிய இயேசு கிறிஸ்துவில் அடைக்கலம் புகுந்து, தூய ஆவியாரின் பாதுகாப்பில் வாழும்போதுதான் மூவொரு கடவுளின் அருளை நாம் அடைகின்றோம். ஆம். நாமும் மூவொரு இறையனுபவத்தைப் பெற்று, இறையன்பில் நிலைத்திருக்க அழைக்கப்பட்டிருக்கிறோம். மூவொரு இறைவன் இணைந்து இருப்பது போல் நாமும் இவ்வுலகில் உறவோடு வாழ்வோம். உறவே மனிதம், உறவே புனிதம், உறவே உண்மை தெய்வம் என்பதைப் போலவும், நாம் மண்ணில் அன்பர்களாய் வாழ்வோம்.

## திருச்சபைச் செய்திகள்

சகோ. சுரேஷ் இயேசுபாலன் சச.

### 1. புனிதத்துவத்தில் வாழ உதவும் வழிகள் விவிலியத்திலேயே உள்ளன

இன்றைய உலகில் புனிதத்துவத்திற்கான அழைப்பு குறித்து GAUDETE ET EXSULTATE என்ற தலைப்பில், திருத்தூது அறிவுரை ஏட்டினை, வெளியிட்டார் திருத்தந்தை பிரான்சிஸ் "மகிழ்ந்து பேருவகைக் கொள்ளுங்கள்" என்று இயேசு விடுக்கும் அழைப்பு, அவருக்காக அவமானப்படுத்தப்பட்டு, துன்பங்களை அனுபவிக்கும் மக்களுக்காக விடுக்கப்பட்டுள்ளது என தன் ஏட்டின் துவக்கத்தில் கூறியுள்ள திருத்தந்தை, இன்றைய உலகில் புனிதத்துவத்திற்கான அழைப்பை எவ்வாறு நடைமுறைப்படுத்த முடியும் என்பது குறித்த பரிந்துரையே இத்திருத்தூது அறிவுரையின் முக்கிய நோக்கம் என அதில் எழுதியுள்ளார்.

### 2. இரக்கத்தின் மறைப்பணியாளர்களின் பணி மதிப்புமிக்கது

இரக்கத்தின் மறைப்பணியாளர்கள், திருஅவைக்கு மிகவும் தேவைப்படும் பணியை ஆற்றுகின்றனர் என்று அவர்களை ஊக்கப்படுத்தி பாராட்டினார் திருத்தந்தை பிரான்சிஸ். இரக்கத்தின் யூபிலி ஆண்டில், உலகெங்கும் அனுப்பி வைக்கப்பட்ட, இரக்கத்தின் மறைப்பணியாளர்களுக்கென புதிய வழியில் நற்செய்தி அறிவிக்கும் திருப்பீட அவை நடத்திய கூட்டத்தில் கலந்துகொண்ட ஏறத்தாழ 550 அருட்பணியாளர்களை வத்திக்கானின் ரெஜியா அறையில் சந்தித்து

உரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இரக்கத்தின் மறைப்பணியாளர்கள், யூபிலி ஆண்டில் மறைப்பணியாற்றுவதற்கென நியமிக்கப்பட்டாலும் அந்த ஆண்டில் இடம்பெற்ற ஏராளமான மனமாற்றங்களின் சாட்சியங்களை அறிந்த பின்னர் அப்பணியாளர்களைத் தொடர்ந்து ஈடுபட வைக்கும் எண்ணம் வந்தது என்றும் கூறினார்.

### 3. இந்தியாவின் மத நல்லிணக்கம் பாதுகாக்கப்பட வேண்டும்

இந்தியாவின் சமூக மற்றும் மத நல்லிணக்க வாழ்வைப் பாதுகாப்பதற்கும், வன்முறைகளை வன்மையாகக் கண்டிப்பதற்கும் அவசரத் தேவையுள்ளது என்று, இந்தியாவில் உள்ள முக்கிய மதங்களின் தலைவர்கள் கூறியுள்ளார்கள். கிறிஸ்தவ, இந்து, புத்த, இஸ்லாம் உள்ளிட்ட இந்தியாவின் ஆறு முக்கிய மதங்களின் ஆன்மீகத் தலைவர்கள் இணைந்து அண்மையில் கோவாவில் கூடி, பீகார், மேற்கு வங்காளம், இராஜஸ்தான், ஒடிசா மற்றும் ஏனைய சில மாநிலங்களில் இடம்பெறும் மத வன்முறைகள் குறித்து விவாதித்த பின்னர், வெளியிட்ட அறிக்கையில் "ஒற்றுமை உணர்வைப் பெறும்போதும், பகைமை உணர்வுகள் அகற்றப்பட்டு, அன்பும் அமைதியும் குடிகொள்ளும்போதும் மட்டுமே, நாடு முன்னேற்றப் பாதையில் செல்ல முடியும் எனக் கூறும் இந்திய மதத் தலைவர்கள், மத நம்பிக்கைகளின் அடிப்படையில், ஒருவரை தேச விரோதி என முத்திரைக் குத்துவது குறித்து தங்கள் வன்மையான கண்டனத்தை வெளியிட்டுள்ளனர்.

### 4. ஒடிசா மாநிலத்தில் கத்தோலிக்க கோவில்களில் தாக்குதல்

இந்தியாவின் ஒடிசா மாநிலத்திலுள்ள இரண்டு பங்குத்தள கோவில்கள், சமூக விரோதிகளால் சேதமாக்கப்பட்டுள்ளன. உயிர்ப்புப் பெருவிழாவான ஞாயிறன்று, Rourkela மறைமாவட்டத்திலுள்ள Bihabandh என்ற கிராமத்துக் கத்தோலிக்கக் கோவிலின் புனிதப் பொருள்கள் பாதுகாக்கப்பட்டிருந்த அறையை தீயிட்டுக் கொளுத்தியுள்ள சமூக விரோதிகள், அக்கிராமத்திற்கு அருகேயுள்ள Salangabahal பங்குத்தளத்தின் வாயிலில் உள்ள மாதா சிலையையும், குழந்தை இயேசு சிலையையும் உடைத்து சேதப்படுத்தியுள்ளனர். ஒருசில கிலோ மீட்டர்கள் இடைவெளியில் அமைந்துள்ள இவ்விரு பங்கு கோவில்களையும் ஒரே குழு திட்டமிட்டுத் தாக்கியுள்ளது. இது அவர்கள் கொண்டுள்ள கிறிஸ்தவ விரோதப் போக்கைக் காண்பிக்கிறது என்று Rourkela ஆயர், Kishor Kumar Kujur அவர்கள் கூறினார். ஒடிசாவில் கிறிஸ்தவர்களுக்கு எதிராக நிகழ்ந்த கந்தமால் வன்முறைகள் இடம் பெற்ற 10ம் ஆண்டில் இத்தகையத் தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளது கவலைத் தருவதாக உள்ளது என்று கூறிய கட்டக் புவனேஸ்வர் பேராயர் ஜான் பார்வா அவர்கள், "மதசார்பற்ற ஒருநாட்டில் அதுவும் கிறிஸ்தவர்களின் புனித நாளன்று, கிறிஸ்தவ வழிபாட்டுத் தலங்கள் தாக்கப்பட்டிருப்பது, அதிர்ச்சியளிக்கிறது" என்று கூறினார். இந்திய நாட்டின் பெருமைக்கு இழுக்கைத் தேடித்தரும் இத்தகைய வன்முறைகள் நிறுத்தப்பட அனைவரும் இணைந்து உழைக்க வேண்டும் என்ற அழைப்பையும், பேராயர் பார்வா அவர்கள் விடுத்தார்.

## சுடர் வாசகர் போட்டி - 46 சரியான விடைகள்

1. ஏப்ரல் 8ஆம் நாள்
2. லூக்கா: 2.38
3. 1030 ஜீலை 26
4. திருத்தந்தை 11ஆம் கிளமெண்ட்
5. தூய ஜார்ஜ்
6. தூய மாற்கு
7. தூய மான்ஃபோர்ட்
8. தூய தோமா
9. தொடக்க நூல் 3.15
10. தூய தனிஸ்லாஸ்
11. கிறிஸ்து நாதர் தனது இரத்தத்தை சிந்தி திருச்சபைக்கு சுதந்திரம் பெற்றுத் தந்தார். அந்த சுதந்திரத்தை அவர் மிகமிக நேசிக்கிறார்.
12. திருவிவிலியம், புனிதர்களின் வரலாறு
13. தூய ஜார்ஜ்
14. தூய மாற்கு
15. தூய லூயிஸ் தே மான்போர்ட்

**குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்**

1. S. அந்தோணிசாமி, சேலம்.
2. பவுலின் சூசைநாதன், மதுராந்தகம்.
3. ஜெயந்தி பெர்ணான்டோ, சென்னை.

## சுடர் வாசகர் போட்டி - 47

1. தூய அந்தோணியாரின் வாழ்க்கை வரலாற்றை இலத்தீன் மொழியில் எழுதியவர் யார்?
2. எருசலேம் நகரின் முதல் ஆயர் யார்?
3. தூய மரிய மசரெல்லோ இறந்த ஆண்டு எது?
4. யூதாசுக்கு பதிலாக தேர்ந்தெடுக்கப்பட்ட திருத்தூதர் யார்?
5. "அமைதியில் செயல்பாடு" என்ற விருதுவாக்கைப் பெற்றவர் யார்?
6. கொலை செய்ய அழைத்துச் செல்லும் பொழுது தனக்கு வைத்திருந்த ரொட்டித் துண்டுகளை தன் நண்பர்களுக்கு கொடுத்த அருளாளர் யார்?
7. ஒடிசா மாநிலத்தில் கிறிஸ்தவ கோவில்கள் தாக்கப்பட்டதை குறித்து பேராயர் ஜான் பார்வா கூறியது என்ன?
8. திருச்சபையின் பாதுகாவலர் என தூய யோசேப்பை அறிவித்தவர் யார்?
9. திருத்தூதர் பிலிப்பு பிறந்த ஊர் எது?
10. சகாய அன்னையின் புதல்வியர் சபையின் துணை நிறுவனர் யார்?
11. எத்தியோப்பியா பகுதிகளில் நற்செய்தியை அறிவித்த திருத்தூதர் யார்?
12. அச்சுப்பணி மூலம் இறை நம்பிக்கையை வளர்த்த சலேசிய புனிதர் யார்?
13. இயேசு உயிர்த்தப்பின் 50வது நாளை எந்த விழாவாக கொண்டாடுகின்றோம்?
14. வானிலிருந்து "இவர்கள் என் குழந்தைகள் இவர்களை கவனித்துக் கொள்" என்ற குரல் யாருக்கு கேட்டது?
15. தொழிலாலர்களின் பாதுகாவலர் தூய யோசேப்பு என்று திருப்பலியில் சேர்த்தவர் யார்?

### தீபகச் சுடர்

**அன்பு வாசகர்களே!**

மாதம் தவறாமல் ஒரு பிரதியைப்பெற ஆண்டு சந்தா ரூ. 100/ செலுத்தி உங்கள் பெயரைப் பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

**தீபகம்**
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
தொலைப்பேசி: 044-26428162.

பெயர்:....................................
முகவரி:..................................
..........................................
..........................................
..........................................

## அடுத்த சுடரில்

### பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

கிறிஸ்துவின் திரு உடல் திரு இரத்தம் பெருவிழா
தூய போனிபார்ஸ்
திரு இருதய ஆண்டவர் பெருவிழா
தூய மரியன்னையின் திருஇருதயம்
பொதுக்காலம் 10ஆம் ஞாயிறு
தூய பர்னபா திருத்தூதர்
அருளாளர் பிரான்சிஸ் கெசியான்டு கோ
தூய பதுவை அந்தோணியார்
பொதுக்காலம் 11ஆம் ஞாயிறு
தூய நோலா பவுலீனுஸ் ஆயர்
தூய ஜோசப் க.்.பாஸோ
பொதுக்காலம் 12ஆம் ஞாயிறு
திருமுழுக்கு யோவானின் பிறப்பு பெருவிழா
அலெக்சாந்திரியா தூய சிரில்
தூய பேதுரு, பவுல் திருத்தூதர் பெருவிழா

### பகுதி 2: விசுவாசத்தில் வளர...

இல்லங்கள் தோறும் திருஇருதயம்
இயேசுவின் திருவுடல் திருரத்தம் வாழும் புனிதம்
தூய பதுவை அந்தோணியாரின் வாழ்வு தரும் பாடம்
திருச்சபை செய்திகள்

**அன்பு நிறை வாசகர்களே!**

இந்த மாத “சுடர் வாசகர் போட்டி” பதில்களை மே 20ம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று பங்கேற்பாளர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும். (சரியான முகவரியைக் குறிப்பிடவும்)

## மே மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | செ | தொழிலாளரான தூய சூசையப்பர் | தி.ப. 14: 19-28 | மத். 13: 54-58 |
| 2 | பு | தூய அத்தனாசியார் | தி.ப. 15: 1-6 | யோவா. 15: 1-8 |
| 3 | வி | தூய பிலிப்பு, யாக்கோபு திருத்தூதர்கள் | 1கொரி. 15: 1-8 | யோவா. 14: 6-14 |
| 4 | வெ | | தி.ப. 16: 22:31 | யோவா. 15: 12-17 |
| 5 | ச | | தி.ப. 16: 1-10 | யோவா. 15: 18-21 |
| 6 | ஞா | பாஸ்கா காலம் 6ஆம் ஞாயிறு | I. தி.ப.10:25-26,34-35,44-48<br>II.1யோவா. 4: 7-10 | யோவா. 15: 9-17 |
| 7 | தி | | தி.ப. 16:11-15 | யோவா. 15:26-15:4 |
| 8 | செ | | தி.ப. 16: 22-34 | யோவா. 16: 5-11 |
| 9 | பு | | தி.ப. 17: 15,22-18:1 | யோவா. 16: 12-15 |
| 10 | வி | | தி.பா. 18: 1-8 | யோவா. 16: 16-20 |
| 11 | வெ | | தி.ப. 18: 9-18 | யோவா. 16: 20-23 |
| 12 | ச | புனித பங்கிராஸ் மறைச்சாட்சி | தி.ப. 18: 23-28 | யோவா. 16: 23-28 |
| 13 | ஞா | ஆண்டவரின் விண்ணேற்றம் பெருவிழா | I. தி.ப. 1: 1-11<br>II. எபே. 4: 1-13 | மாற்கு 16: 15-20 |
| 14 | தி | தூய மத்தியாஸ் திருத்தூதர் விழா | தி.ப. 1: 15-17,20-26 | யோவா. 15: 9-17 |
| 15 | செ | | தி.ப. 20:17-27 | யோவா. 17:1-11 |
| 16 | பு | | தி.ப. 20: 28-38 | யோவா. 17:11-19 |
| 17 | வி | | தி.ப 22: 30,23:6-11 | யோவா. 17: 20-26 |
| 18 | வெ | புனித முதலாம் யோவான் | தி.ப. 25: 13-21 | யோவா. 21: 15-19 |
| 19 | ச | | தி.ப. 28: 16-20.30-31 | யோவா. 21:20-25 |
| 20 | ஞா | தூய ஆவி பெருவிழா | I. தி.ப. 2: 1-11<br>II. கலா. 5: 16-25 | யோவா. 15:26-27. 16:12-15 |
| 21 | தி | புனித கிறிஸ்தோபர் மெகல்லன்ஸ் | யாக். 3: 13-18 | மாற்கு 9: 14-29 |
| 22 | செ | புனித ரீத்தா காசியா | யாக். 4: 1-10 | மாற்கு 9: 30-37 |
| 23 | பு | | யாக். 4: 13-17 | மாற்கு 9: 39-40 |
| 24 | வி | | யாக். 5: 1-6 | மாற்கு 9: 41-50 |
| 25 | வெ | பாசிநகர் புனித மகதலா மரியா | யாக். 5: 9-12 | மாற்கு 10: 1-12 |
| 26 | ச | தூய பிலிப்பு நேரியார் | யாக். 5: 13-20 | மாற்கு10: 13-16 |
| 27 | ஞா | மூவொரு கடவுள் பெருவிழா | I. இ.ச. 4: 32-34,39-40<br>II. உரோ 8: 14-17 | மத். 28: 16-20 |
| 28 | தி | | 1பேதுரு 1: 3-9 | மாற்கு 10: 17-27 |
| 29 | செ | தூய ஜோசப் கொலால்ஸ்கி | 1பேதுரு 1:10-16 | மாற்கு 10: 28-31 |
| 30 | பு | | 1பேதுரு 1: 18-25 | மாற்கு10: 32-45 |
| 31 | வி | தூய மரியன்னை எலிசபெத்தை சந்தித்தது | செப். 3: 14-18 | லூக். 1:39-56 |